வெளியீடு: 3-11-2021 Issued: 3-11-2021

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு
## (பதினாறாவது பேரவை)

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT
## (SIXTEENTH ASSEMBLY)

**புதன்கிழமை, மே 12, 2021—தொகுதி 1—எண் 2**

**Wednesday, the 12th May 2021—Volume 1—No. 2**

**சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.**
**Legislative Assembly Secretariat, Chennai-600 009.**

**விலை ரூ. 3.00] [Price Rs. 3.00**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

## 12-5-2021

### உள்ளடக்கம்


*பக்கங்கள்*

| | |
|---|---|
| **1. உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் அல்லது உறுதிமொழி எடுத்துக்கொள்ளுதல்—** | *19* |
| **2. பேரவைத் தலைவர் தேர்தல்—** | *20-21* |
| **3. பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்—** | *21-22* |
| **4. பேரவைத் தலைவருக்கும், துணைத் தலைவருக்கும் பாராட்டுரைகளும், நன்றியுரைகளும்—** | *22-75* |
| *மாண்புமிகு திரு. துரைமுருகன்* | *22-25* |
| *திரு. எடப்பாடி K. பழனிசாமி* | *25-28* |
| *திரு. ஜே.ஜி. பிரின்ஸ்* | *28-29* |
| *திரு. ஜி.கே. மணி* | *29-33* |
| *திரு. நயினார் நாகேந்திரன்* | *34-36* |
| *திரு. ம. சிந்தனை செல்வன்* | *36-39* |
| *டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்* | *39-40* |
| *திரு. ட்டி. இராமச்சந்திரன்* | *41-42* |
| *திரு. வி.பி. நாகைமாலி* | *42-43* |
| *முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா* | *43-45* |
| *திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்* | *45-47* |
| *திரு. தி. வேல்முருகன்* | *48-52* |
| *திரு. மு. ஜெகன் மூர்த்தி* | *52-53* |
| **மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்* | *53-59* |

பக்கங்கள்

**4. பேரவைத் தலைவருக்கும், துணைத்தலைவருக்கும் பாராட்டுரைகளும், நன்றியுரைகளும்**— *தொடர்ச்சி*

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்* 59-62

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* 62-75

**5. அரசினர் தீர்மானம்—**

*பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்* 75-76

*மாண்புமிகு திரு. துரைமுருகன்* 75

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பிலவ, சித்திரை 29, திருவள்ளுவர் ஆண்டு—2052

## 2021 மே 12, புதன்கிழமை

*சென்னை–600 002, வாலாஜா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், கலைவாணர் அரங்கம், மூன்றாவது தளத்தில் உள்ள பல்வகை கூட்டரங்கத்தில் மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர்* **திரு. கு. பிச்சாண்டி** *அவர்கள் தலைமையில் முற்பகல் 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):**

*"கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்*
*உடையான்ஆம் வேந்தர்க்கு ஒளி."*

*கொடுக்கும் பண்பு, முகம் மலர்ந்து பேசுதல், நீதி தவறாத ஆட்சி, குடிமக்களைக் காத்தல் ஆகிய நான்கும் கொண்ட அரசர் மற்ற அரசர்களுக்கெல்லாம் ஒளி விளக்குப் போன்றவர் ஆவார்.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

## 1. உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் அல்லது உறுதிமொழி எடுத்துக்கொள்ளுதல்

**மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** *இன்றைய முதல் நிகழ்ச்சி, ஏற்கெனவே உறுதிமொழி எடுத்துக்கொள்ளாத உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக்கொள்ளுதல் ஆகும். ஏற்கெனவே உறுதிமொழி எடுத்துக்கொள்ளாத உறுப்பினர்கள் அவைக்கு வருகை புரிந்திருந்தால் அவர்கள் இப்போது உறுதிமொழி எடுத்துக்கொள்ளலாம்.*

*எவருமில்லை.*

## 2. பேரவைத் தலைவர் தேர்தல்

**மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** *பேரவையின் இன்றைய அலுவல், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 178-வது பிரிவின்கீழ், பேரவைத் தலைவர் தேர்தல் ஆகும். இப்பதவிக்கான வேட்புத் தாள், சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்க்கப்பட்டுள்ளது.*

*சட்டமன்றப் பேரவை விதி 7, உள்விதி 4-ன்படி, பேரவைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பெற்றவர், முன்மொழிந்தவர், அதை வழிமொழிந்தவர் ஆகியோரின் பெயர்களை நான் முதலில் இப்பேரவைக்கு அறிவிக்கவேண்டும். அவர்களின் விவரம்:*

| | | |
|---|---|---|
| *நியமனம் செய்யப்பெற்றவர்* | : | *திரு. மு. அப்பாவு அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி* |
| *முன்மொழிந்தவர்* | : | *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி)* |
| *வழிமொழிந்தவர்* | : | *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி)* |

*பேரவைத் தலைவர் பதவிக்கு திரு. மு. அப்பாவு அவர்கள் நியமனம் செய்யப்பட்டு, அவரது வேட்புத் தாள் மட்டுமே பெறப்பட்டுள்ளதால், மாண்புமிகு திரு. மு. அப்பாவு அவர்கள், இப்பேரவையின் தலைவராக (மேசையைத் தட்டும் ஒலி) ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு இப்பேரவைக்கு அறிவிக்கிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவராக பேரவையால் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. மு. அப்பாவு அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இத்துடன் என்னுடைய பணியை நிறைவு செய்கின்றேன்.*

*அடுத்து, தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாண்புமிகு பேரவையின் தலைவர் அவர்களை மரபுப்படி அவரது இருக்கையில் அமரச் செய்தல் வேண்டும். எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அழைத்துவந்து*

*2021 மே 12]* *[தற்காலிகப் பேரவைத் தலைவர்]*

பேரவைத் தலைவர் இருக்கையில் அமரச் செய்யும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், இருக்கையில் அமருவதற்குச் செல்லும் நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், அவரின் இருக்கையில் அமர்ந்த பின்னரே அமர்தல் வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை, பேரவை முன்னவர் மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களும் அழைத்துவந்து, அவரது இருக்கையில் அமரச் செய்தார்கள்.) (மேசையைத் தட்டும் ஒலி)*

## 3. பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அடுத்த அலுவல், பேரவைத் துணைத் தலைவர் தேர்தல் ஆகும். பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கான வேட்புத் தாள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் அளிக்கப்பட்டுள்ளது. சட்டமன்றப் பேரவை விதி 8, உள்விதி 2-ன்படி, பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப் பெற்றவர், முன்மொழிந்தவர், அதை வழிமொழிந்தவர் ஆகியோரின் பெயர்களை நான் முதலில் இப்பேரவைக்கு அறிவிக்க வேண்டும். அவர்களின் விவரம்:

| | | |
|---|---|---|
| நியமனம் செய்யப்பெற்றவர் | : | திரு. கு. பிச்சாண்டி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) |
| முன்மொழிந்தவர் | : | மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) |
| வழிமொழிந்தவர் | : | மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) |

*முற்பகல் 10-05*

பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு திரு. கு. பிச்சாண்டி அவர்கள் மட்டும் நியமனம் செய்யப்பட்டு, அவரது வேட்புத் தாள்

[பேரவைத் தலைவர்] [2021 மே 12

மட்டுமே பெறப்பட்டுள்ளதால், மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி அவர்கள், இப்பேரவையின் துணைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்கு அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. கு. பிச்சாண்டி அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 4. பேரவைத் தலைவருக்கும், துணைத் தலைவருக்கும் பாராட்டுரைகளும், நன்றியுரைகளும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவைத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் ஆகியோருக்கு வாழ்த்துரைகள். முதலில் மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு மன்ற உறுப்பினர்களே, உங்கள் அனைவருக்கும் முதலில் என்னுடைய பணிவான வணக்கம். நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும், துணைத் தலைவர் அவர்களையும் இந்த மாமன்றத்தில் போட்டியின்றி ஒருமனதாகத் தேர்ந்தெடுப்பதற்கு நல்ல சமிக்ஞையோடு நடந்துகொண்ட எதிர்க்கட்சிக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆசனத்தில் நீங்கள் அமர்ந்திருக்கிறீர்கள். 1919-லிருந்து கிட்டத்தட்ட நூறு ஆண்டுகளுக்கு மேலாக இந்தச் சட்டமன்றம் நடந்து வருகிறது. முதலாவது இரட்டை ஆட்சி வந்தபொழுது சென்னை மாகாணத்திலும், பஞ்சாபிலும்தான் ஆட்சி அமையப்பெற்றது. அப்பொழுது எங்களது பாட்டன் கட்சி, ஜஸ்டிஸ் கட்சி, பனகல்ராஜா அவர்கள் தலைமையில் ஆட்சி அமைத்தது. அதற்குப் பிறகு 100 ஆண்டு காலம் நடந்து வந்திருக்கிறது. நூறு ஆண்டு காலத்திற்கும் மேலான வரலாற்றைக் கொண்ட இச்சபைக்கு இன்றைக்கு நீங்கள் தலைவராக வந்திருக்கிறீர்கள். இந்த மன்றம் 1919 ஆம் ஆண்டு முதல் 1922 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற பாங்கு

கண்டு, வெலிங்டன் பிரபு அவர்களும், அவருடைய சீமாட்டி அவர்களும் தந்த இருக்கையை இந்த மாமன்றத்தில் வைக்க வேண்டுமென்று அளித்தார்கள். அவர்கள் தந்த ஆசனத்திலே நீங்கள் இன்றைக்கு அமர்ந்திருக்கிறீர்கள். இந்த 100 ஆண்டு காலத்தில் எத்தனையோ பெரியவர்கள் தங்களைப்போல் இந்த ஆசனத்தில் அமர்ந்திருந்திருக்கிறார்கள். நான் இந்தச் சட்டமன்றத்திற்கு வந்ததிலிருந்து எனக்கு தெரிந்தவரையில்கூட, திரு. முனு ஆதி, திரு. மதியழகன், திரு. இராசாராம், புலவர் கோவிந்தன், திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன், திரு. தமிழ்க்குடிமகன், திரு. காளிமுத்து, திரு. பி.எச். பாண்டியன், திரு. ஆவுடையப்பன், திரு. ப. தனபால் என தங்களுடன் சேர்த்து 11 சட்டமன்றத் தலைவர்களை நானே பார்த்திருக்கிறேனென்றால், எவ்வளவு நீண்ட, நெடிய காலம் இருக்கும். ஆகையினால் இந்தச் சபைக்கு நீங்கள் தலைவராக வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. இவ்வளவு வரலாற்றுப் புகழ் பெற்ற சபையில் இவ்வளவு சிறப்புக்குரிய ஆசனத்தில் அமர்ந்திருக்கிறோமே என்று இப்பொழுது உங்கள் மனதிலே மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கும். எங்கேயோ தமிழ்நாட்டின் தென்கோடியில், ஊர் பெயர் அறியாத கிராமத்தில், ஒரு விவசாயக் குடிமகனாகப் பிறந்து, வளர்ந்து இன்றைக்கு இந்த ஆசனத்தில் அமர்ந்திருக்கிறோம் என்று உங்கள் மனம் மகிழ்ச்சியைத் தூண்டும். எனக்கும் அப்படித்தான். 1971 ஆம் ஆண்டிலே எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் இந்த மன்றத்திற்கு என்னைக் கொண்டுவந்தார்கள். பல்வேறு பொறுப்புகளிலே இருந்த எனக்கு, இன்றைக்கு எங்கள் கட்சியினுடைய தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு புதிய பொறுப்பு, அவை முன்னவர் என்ற பொறுப்பை அளித்துள்ளார்கள். அதன் காரணமாகத் தங்களை இந்த இருக்கையிலே அமர வைக்கின்ற அருமையான வாய்ப்பை எனக்குத் தந்ததற்காக என்னுடைய தலைவர் அவர்களுக்கு நான் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 10–10*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சபையில் எத்தனையோ அமைச்சர்கள் இருக்கிறார்கள். இந்தச் சபையில் யார் இருந்தார்கள், யார் போனார்கள் என்பது வருங்காலத்தில் யாருக்கும் தெரியாது. இரண்டு பேருக்கு மட்டும்தான் வரலாறு

உண்டு. ஒன்று, யார், யார் முதலமைச்சர்களாக இருந்தார்கள் என்று, அவர்களுடைய பெயர் மட்டும்தான் அந்த அலுவலகத்திற்கு முன்னால் எழுதப்பட்டிருக்கும் அல்லது செதுக்கப்பட்டிருக்கும். மற்றொன்று, எத்தனையோ பேர் இருந்தாலும், யார், யார் சபாநாயகர்களாக இருந்தார்கள் என்று, அவர்களுடைய பெயர், படம் வைக்கப்பட்டிருக்கும். ஆகையினால், நாங்கள் அமைச்சர்களாக இருந்தாலும், நாளை ஊர், பெயர் தெரியாமல் போகலாம். ஆனால், என்றைக்கும் உங்களுடைய படம் இருக்கும்; பெயர் இருக்கும்; புகழ் இருக்கும். இங்கு வருபவர்கள் எல்லாம் உங்கள் படத்தைப் பார்ப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நல்ல வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்ததிலே எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, உங்களைப் பற்றி நான் சொல்ல வேண்டுமானால், நீங்கள் ஓர் அரசியல் போராளி; எதிர்நீச்சல் போட்டே பழக்கப்பட்டவர், சுயமரியாதையை அடகு வைக்கத் தெரியாதவர்; எடக்குமடக்காகப் பேசினாலும், வல்லடி வீம்புக்காரராகப் பேசினாலும், அவர்களுக்குப் பதிலளிப்பதிலே சளைக்காதவர். நீதி கேட்டு நீண்ட தூரம் போய், கண்ணுக்குத் தெரிந்த அந்த நீதி, இந்த மண்ணுக்கு வருவதற்கு முன்னால், நீங்கள் மீண்டும் போட்டியிட்டு, வென்றிருக்கிறீர்களே! (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் மீண்டும் போட்டியிட்டு, வென்றிருக்கிறீர்கள். உங்களை எப்படிப் பாராட்டுவது என்று எனக்குத் தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வளவு புகழ் பெற்று இங்கு அமர்ந்திருக்கின்ற நீங்கள் இந்த மன்றத்திலுள்ள எல்லோருடைய அன்பையும் பெறக்கூடிய வகையில், இந்த மன்றத்தை நடத்தியருள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, பேரவைத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற திரு. கு. பிச்சாண்டி அவர்கள், நான் எங்களது கட்சியின் மாணவரணியில் செயலாளராக இருந்தபோது, அவர் கல்லூரி மாணவனாக இருந்து, மாணவரணியில் சேர்ந்து, பின்னர் படிப்படியாக வளர்ந்து, தளபதி அவர்களுடைய தலைமையில் இளைஞரணியில் இணைந்து, பின்னர் திருவண்ணாமலை தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருந்து, தற்போது கீழ்பெண்ணாத்தூர் தொகுதியில் போட்டியிட்டு, வெற்றி பெற்றிருக்கிறார். நீண்ட நெடுங்காலமாக

அரசியலில் இருக்கக்கூடியவர், பொறுமை மிக்கவர், எடுத்தேன், கவிழ்த்தேன் என்று பேசத் தெரியாதவர். ஆனாலும், அமைதியாக அமர்ந்திருப்பவர். எப்போதுமே நான் பார்ப்பேன், இந்தச் சபைக் கதவை எப்போது திறக்கிறார்களோ அப்போது உள்ளே நுழைவார். பிறகு, எல்லோரும் சென்ற பிறகுதான் சபையைவிட்டுப் போவார். சபை அலுவல் நேரம் முடியும் வரை இருக்கக்கூடிய மனோபாவம் படைத்தவர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள். எனவே, இந்தச் சபையின் நடவடிக்கைகள் அத்தனையும் அவருக்குத் தெரியும். எனவே, நீங்களும், அவரும் இணைந்து, இந்தச் சபையை நடத்த வேண்டும். நீங்கள் படுவேகம் உடையவர்; அவர் நிதானம் உடையவர். எங்களுக்கு இருவரும் தேவை என்று தெரிவித்து, எல்லோருடைய சார்பிலும் என் மகிழ்ச்சியையும், வணக்கத்தையும் தெரிவித்து, விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. எடப்பாடி K. பழனிசாமி:** பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா ஆகிய இரு பெரும் தெய்வங்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், இப்பேரவையில் உள்ள அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், 1996 ஆம் ஆண்டு ராதாபுரம் சட்டமன்றத் தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்பான முறையிலே பணியாற்றியவர். 2001 ஆம் ஆண்டு ராதாபுரம் சட்டமன்றத் தொகுதியில் சுயேட்சையாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றவர். 2006 ஆம் ஆண்டு ராதாபுரம் சட்டமன்றத் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர். 2021 ஆம் ஆண்டு அதே ராதாபுரம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு, வெற்றி பெற்று, 16–வது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் தலைவராகப் பதவியேற்கும் தங்களுக்கு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், எனது சார்பிலும் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தின் வரலாற்றை சற்றே திரும்பிப் பார்த்தால், இந்த

மாமன்றம் பெரும் புகழோடும், பெயரோடும் நிலை பெற்றிருக்கின்றது என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். திரு. புலுசு சாம்பமூர்த்தி, திரு. ஜே. சிவசண்முகம் பிள்ளை, திரு. என். கோபால மேனன், டாக்டர் யு. கிருஷ்ணா ராவ், திரு. எஸ். செல்லபாண்டியன், டாக்டர் கா. காளிமுத்து, திரு. பி.எச். பாண்டியன், அண்ணன் திரு. ப. தனபால் போன்றோர் இந்த மாமன்றத்தின் புகழ் ஓங்கும் அளவிற்கு மகத்தான பணியை ஆற்றியிருக்கின்றார்கள். 1952 ஆம் ஆண்டு முதல் பொதுத் தேர்தலுக்குப் பிறகு பேரவைத் தலைவராக திரு. ஜே. சிவசண்முகம் பிள்ளை அவர்கள், இந்தச் சட்டமன்றத்தில் ஆரோக்கியமான விவாதங்களை நடத்தி, இந்த மாமன்றத்திற்குப் பெருமை ஏற்படுத்தியவர். அதேபோல, பேரவைத் தலைவராகப் பணியாற்றிய டாக்டர் யு. கிருஷ்ணா ராவ் அவர்களும், மிகச் சூடான விவாதம் நடைபெறும் நேரங்களில் நகைச்சுவையாகப் பேசி, சூட்டைத் தணிக்கும் வல்லமை படைத்தவர் என கேள்விப்பட்டுள்ளேன். அந்தவகையில், அடுத்தடுத்து பல திறமைவாய்ந்த பேரவைத் தலைவர்களை நாம் கண்டிருக்கின்றோம்.

மக்களாட்சித் தத்துவத்திலே ஜனநாயகத்தின் இதயம் சட்டமன்றமாக அமைந்திருக்கின்றது. ஜனநாயகத்தின் முக்கியமான மூன்று தூண்களில் ஒன்றாக இந்தச் சட்டமன்றம் விளங்கிக் கொண்டிருக்கின்றது. இதயம் சீராகத் துடித்தால்தான் ஜனநாயகத்தின் சட்டமன்ற மரபுகளும் விதிகளும் காப்பாற்றப்படும். பெரும்பான்மை உள்ள கட்சியின் விருப்பப்படி பேரவைத் தலைவர் தேர்தல் நடைபெறுவது வழக்கமென்றாலும், தேர்வு செய்யப்பட்ட பிறகு அவர் அனைத்துக் கட்சிகளுக்கும் பொதுவானவராக இருந்திடல் வேண்டும்.

மாண்புமிகு அம்மா அவர்கள் 2016 ஆம் ஆண்டு இந்த அவையில் பேசும்போது, 'ஜனநாயக நாட்டில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்பவை ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள். இதில், ஒரு பக்கம் சரியாக இருந்து மறுபக்கம் சிதைந்து போயிருக்குமேயானால் அந்த நாணயம் செல்லாக் காசாகி விடும்' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் தெரிவித்த கருத்தை வலியுறுத்தி, 'இந்த அவையில் ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சிகள் நாட்டு மக்களுக்காக பயன்படக்கூடிய ஆக்கப்பூர்வமான கருத்துகளை, வாதங்களை மேற்கொள்ள வேண்டும்' என்று எடுத்துரைத்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், ஏற்கெனவே ஆசிரியராகப் பணியாற்றியவர். தம்மிடம் பயிலும்

மாணாக்கர்களிடம் பாரபட்சமின்றி அன்பு காட்டி, நல்ல முறையில் அவர்களை வழிநடத்திச் செல்லும் சிறந்த ஆசிரியராக விளங்கியவர். இந்த மாமன்றத்திலே நடக்கவிருக்கும் விவாதங்களிலே, உணர்ச்சிவசப்பட்டுப் பேசக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் இருப்பார்கள்; நகைச்சுவையுடன் பேசக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் இருப்பார்கள்; ஆக்ரோஷத்துடன் பேசக்கூடியவர்களும் இருப்பார்கள். காரசாரமாக விவாதங்கள் நடைபெறும். அப்போது எல்லோரும் உணர்ச்சிவசப்பட்டாலும், கட்சிப் பாகுபாடின்றி, அனைவரையும் ஒருசேர நினைத்து, சிறந்த ஆசிரியராக, நடுவராக இருந்து தீர்ப்பளிக்கும் பணியினை பேரவைத் தலைவர் நடுநிலையோடு ஆற்ற வேண்டும்.

இந்த மாமன்றத்தில் தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் பிரதான எதிர்க்கட்சியாக, மக்கள் நலன் கருதி எங்கள் உறுப்பினர்கள் நல்ல பல கருத்துகளைத் தெரிவிப்பதற்கு அதிக வாய்ப்பினை அளிக்க வேண்டும். இப்பேரவையில் நடுநிலை தவறாமல், சட்டமன்ற நடவடிக்கைகளை நடத்திட எங்கள் பூரண ஆதரவு உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். 'சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல்' இந்த மன்றத்தை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், ஏற்கெனவே அமைச்சராகவும், சட்டப் பேரவை உறுப்பினராகவும் பணியாற்றிய அனுபவம் கொண்ட பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நடந்து முடிந்த சட்டமன்றப் பொதுத் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதலமைச்சர் வேட்பாளராக என்னைத் தேர்வு செய்து அறிவித்த கழக ஒருங்கிணைப்பாளர் மற்றும் கழகப் பொறுப்பாளர்களுக்கு எனது நன்றியினை இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

எடப்பாடி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்ட என்னைப் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்திலே வெற்றிபெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கு இத்தருணத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தமிழ்நாடு முழுவதும் இரட்டை இலை சின்னத்தில் போட்டியிட்டு, அதில் 66 தொகுதிகளில் வெற்றிபெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கும், கூட்டணிக் கட்சிகளின் சார்பில் போட்டியிட்டவர்களை வெற்றிபெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நன்றியை இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு முழுவதும் 234 தொகுதிகளில் போட்டியிட்ட கழக வேட்பாளர்களுக்கும், கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்களுக்கும் வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நன்றியை மீண்டும் தெரிவித்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு காங்கிரஸ் கட்சி சார்பிலே வாழ்த்துகளையும், வணக்கங்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கும், குறிப்பாக என்னோடு காங்கிரஸ் கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிட்டு, வெற்றி பெற்று இங்கு உறுப்பினர்களாக வருகை தந்திருக்கக்கூடிய அனைத்து நண்பர்களுக்கும் வணக்கங்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் பதவி என்பது கி.பி. 1400–களில் இங்கிலாந்து நாட்டில் உருவாக்கப்பட்டது. அவர், பெரும்பான்மை கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற சார்நிலை இல்லாமல், யதார்த்த நெறிமுறையைப் பின்பற்றி அனைவருக்கும் சம வாய்ப்பினை வழங்குவது மட்டுமின்றி, ஆளும் கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் ஒரு பாலமாக செயல்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. நீங்கள் ராதாபுரம் சட்டப் பேரவைத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டாலும், 234 தொகுதிகளுக்கும் சொந்தக்காரரர் என்று நான் சொல்வேன். எனவே, தாங்கள் 234 தொகுதி மக்களின் குரலை, சட்டமன்ற உறுப்பினர்கள் வாயிலாக இந்த அவையில் ஒலிக்கச் செய்து, மாண்புமிகு முதல்வர் மற்றும் மாண்புமிகு அமைச்சர்

பெருமக்களிடமிருந்து தக்க பதிலைப் பெற்றுத் தருவது என்பது மிக முக்கியமானது என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பொறுப்பை தாங்கள் அற்புதமாகச் செய்வீர்கள் என்று ஆளும் கட்சியும், எதிர்க்கட்சிகளும், நாங்களும் நம்புகிறோம். காங்கிரஸ் கட்சியின் மாநிலத் தலைவர் திரு. கே.எஸ். அழகிரி அவர்கள், தங்களது தேர்வு குறித்து மகிழ்ச்சியை என் வாயிலாக இந்த அவைக்குப் பகிர்ந்துகொள்வது மட்டுமல்லாமல், ஜனநாயகத்தின் மாண்பினைக் கட்டிக் காக்கும் நடுவராக, தலைவராக நீங்கள் செயல்படுவீர்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்திருக்கிறார்; உங்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்திருக்கிறார். உங்களைப் பொறுத்தமட்டில், தேசிய பாரம்பரியமும், திராவிடப் பாரம்பரியமும் கலந்த கலவை என்று நான் சொல்வேன். சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட தாங்கள், சமூக நீதி காக்கும் போராளியாகச் செயல்பட்டவர். தமிழக மக்களுடைய நலனுக்காக, குறிப்பாக நெல்லை மாவட்ட மக்களுக்காக போராளியாக பல்வேறு வெற்றிகளைப் பெற்றவர் நீங்கள். அடக்குமுறைக்கு அஞ்சாதவர்; நீண்ட அரசியலுக்குச் சொந்தக்காரரர். மக்களின் பிரச்சினைகளுக்கு போராட்டங்கள் மூலமாகவும், சட்டமன்றம் மூலமாகவும், நீதிமன்றம் மூலமாகவும் நல்ல தீர்வைப் பெற்றுத் தந்தவர். ஆகவே, காங்கிரஸ் கட்சியின் சார்பிலே உங்கள் பணி சிறக்க வாழ்த்துகின்றேன்.

இதுபோன்று, இன்று துணைத் தலைவராகத் தேர்வு செய்யப் பெற்றுள்ள அன்பிற்குரிய துணை சபாநாயகர் அவர்கள், அமைச்சராகப் பணியாற்றியவர், மிகவும் அமைதியானவர்; நல்லவர்; நல்ல பண்பாளர்; நீண்ட அனுபவம் பெற்ற அவர்கள் இங்கே நல்ல பணியைச் செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. நீங்களும், துணை சபாநாயகர் அவர்களும் சேர்ந்து இந்த நல்ல பணியைச் செய்யுங்கள். இந்த மண்ணிற்குப் பெருமை சேருங்கள், இந்த மன்றத்திற்குப் பெருமை சேருங்கள் என்று உங்களை காங்கிரஸ் கட்சியின் சார்பிலே, என் சார்பிலே வாழ்த்தி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

முற்பகல் 10–25

**திரு. ஜி.கே. மணி:** வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பேரவையில் ‘சபாநாயகர்’ என்று போற்றப்படுகின்ற பேரவைத் தலைவராக

ஒருமனதாகத் தேர்வு செய்யப்பட்டு, பொறுப்பேற்றிருக்கின்ற பேரவைத் தலைவர் அவர்களுக்கும், முதன்முதலாக தமிழ்நாட்டின் ஒரு முதலமைச்சரின் மகன் என்ற அளவில் பொறுப்பேற்றிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு திரு. இ.பி.எஸ். அவர்களுக்கும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் மாண்புமிகு திரு. ஓ.பி.எஸ். அவர்களுக்கும், அவையிலே பொறுப்பேற்றிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், சக உறுப்பினர்களாக இருக்கின்ற அன்பு சகோதர, சகோதரிகள் அத்துணை பேருக்கும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் என்னுடைய நெஞ்சார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த 16–வது சட்டமன்றப் பேரவையின் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள, உங்களையெல்லாம் வாழ்த்துவதற்கு எனக்கு வாய்ப்பினை வழங்கியிருக்கின்ற, உருவாக்கிக் கொடுத்திருக்கின்ற சமூக நீதிக் காவலர் மருத்துவர் அய்யா அவர்களுக்கும், இளைஞரணித் தலைவர் திரு. அன்புமணி அவர்களுக்கும், சட்டமன்றப் பொதுத் தேர்தலில் அ.இ.அ.தி. மு.க. தலைமையில் கூட்டணி அமைத்து, இந்தக் கூட்டணியில் ஜி.கே. மணியின் வெற்றிக்கு உழைத்திட்ட, வாக்களித்த, இந்த அவைக்கு வருவதற்குக் காரணமாக இருந்த பெண்ணாகரம் தொகுதிவாழ் வாக்காள பெருமக்களுக்கும், இட ஒதுக்கீட்டுப் போராட்டத்தில் இன்னுயிர் நீத்த 21 தியாகிகளுக்கும் வீர வணக்கத்தை செலுத்தி, தலைவர் அவர்களை நான் வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அவையில் பேரவைத் தலைவராக அமர்ந்திருக்கின்ற தங்களுக்கு, எங்கள் சமூக நீதிக் காவலர் மருத்துவர் அய்யா அவர்களின் சார்பிலும், இளைஞரணி தலைவர் மருத்துவர் திரு. அன்புமணி அவர்களின் சார்பிலும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலும் என்னுடைய நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக,

தோன்றின் புகழோடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று

என்று திருக்குறள் சொல்கிறது. அதற்கேற்ப தங்களைப்பற்றி நான் நன்கு அறிந்தவன். அரசியலுக்கு வருவதற்கு முன்பு, தாங்கள் ஓர்

ஆசிரியர். 1996 ஆம் ஆண்டு சட்டமன்றப் பேரவையில் இருவரும் சந்தித்துக்கொண்ட நேரத்தில், நாம் இருவரும் ஆசிரியர்கள்; அவைக்கு வந்திருக்கின்றோம் என்று நீங்கள் பெருமையாகச் சொன்னதை நான் எண்ணிப் பார்க்கிறேன். ஆகவே, ஆசிரியராகப் பணியைத் தொடங்கி, அரசியலில் பெருந்தலைவர் காமராஜர்மீது பற்றுகொண்டு, அங்கே தடம் பதித்து, உங்களின் கடினமான உழைப்பால் அரசியலில் உயர்ந்து, இன்று பேரவைத் தலைவராக வீற்றிருப்பது எங்களுக்கெல்லாம் மிகுந்த மகிழ்ச்சி. ஆகவே, இந்தப் பேரவைத் தலைவர் பொறுப்பு என்பது சாதாரண பொறுப்பல்ல, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அழகு சேர்ப்பது மட்டுமல்ல; வரலாற்றிலே இடம்பெறக்கூடிய மிக முக்கிய பொறுப்பு. குறிப்பாக, யார், யாரெல்லாம் இந்த அவையில் பேரவைத் தலைவர்களாக இருந்தார்கள் என்பதை நான் பட்டியலிட்டு, குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

ஆங்கிலேயர் காலத்திற்குப் பிறகு திரு. சிவசண்முகம் பிள்ளை, திரு. மேனன் எனத் தொடங்கி, பல்வேறு பேரவைத் தலைவர்கள். அதிலும் குறிப்பாகச் சொல்லப்போனால், பேரவைத் தலைவராக வீற்றிருந்த திரு. செல்லபாண்டியன் அவர்களை எண்ணிப் பார்க்கிறோம். அதே நேரத்தில், 'உடல் மண்ணுக்கு; உயிர் தமிழுக்கு' என வாழ்ந்த திரு. சி.பா. ஆதித்தனார் அவர்கள் அமர்ந்திருந்த இடம். அவருக்குப் பிறகு திரு. முனு ஆதி அவர்கள், திரு. ராசாராம் அவர்கள் என பல்வேறு தலைவர்கள் அந்த இடத்தை அலங்கரித்திருக்கிறார்கள். அதிலும், குறிப்பாக சமூக நீதிக்கு வித்திட்ட நீதிக் கட்சியின் பாரம்பரியத்தில் வந்த, மரியாதைக்குரிய திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் அமர்ந்திருந்த இடம். அவருக்கு முன்னால் திரு. தமிழ்க்குடிமகன் அவர்கள், அதற்குப் பிறகு திரு. காளிமுத்து அவர்கள், திரு. ஆவுடையப்பன் அவர்கள், திரு. டி. ஜெயக்குமார் அவர்கள், இறுதியாக மதிப்பிற்குரிய திரு. ப. தனபால் அவர்களைத் தொடர்ந்து நீங்கள் அமர்ந்திருக்கிறீர்கள். ஆகவே, அவர்களெல்லாம் தடம் பதித்த அந்த வரலாற்று நிகழ்வுகளை நாம் எண்ணிப் பார்க்கிறோம். அவர்கள் யாருடைய காலத்திலே இருந்தார்கள்; நீங்கள் பேரவைத் தலைவராக அமர்ந்திருக்கின்ற இடம், அவர்களையெல்லாம் உருவாக்குவதற்குக் காரணமாக இருந்த வரலாற்றினுடைய முக்கியத் தலைவர்கள்; குறிப்பாக, மூதறிஞர் இராஜாஜி அவர்கள் அமர்ந்த அவை; அதைத் தொடர்ந்து பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு முன்னால் பெரியவர்

திரு. பக்தவச்சலம் அவர்கள், அதைத் தொடர்ந்து 1972–ல் அறிமுகமாகி, அன்றிலிருந்து நான் மிகுந்த மரியாதையோடு பழகி வந்தவர் என்ற அடிப்படையில், அருகிலே சென்றால், மணி என்று பாசத்தோடு அழைத்து, இந்தச் சட்டமன்றப் பேரவையில் எனக்கு நல்ல வாய்ப்பினை மட்டுமல்ல, நல்ல முக்கியத்துவத்தைக் கொடுத்த இருபெரும் தலைவர்களை நான் பெருமையோடு எண்ணிப் பார்க்கிறேன். முத்தமிழ் அறிஞர், முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களும், (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களோடு வீராங்கனை என்று போற்றப்பட்ட பெருமதிப்பிற்குரிய புரட்சித் தலைவி அவர்களும் (மேசையைத் தட்டும் ஒலி) அமர்ந்த அவையிலேதான், பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள் அந்த வரலாற்று நிகழ்வுகளை நாம் எண்ணிப் பார்க்கிறோம். அப்படிப்பட்ட தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு இந்திய அளவில் மிக உயரிய பெருமையிருக்கிறது.

சட்டமன்றத்தில் வாதங்கள் இருக்கும்; பிரதிவாதங்கள் இருக்கும். இதையெல்லாம் நடுநிலையோடு ஒருங்கிணைத்து, அவையை நடத்துகின்ற பாங்கு தங்களுக்கு உண்டு; பேரவைத் தலைவர் அவர்களுக்கு உண்டு என்பதை நாங்கள் எண்ணிப் பார்க்கிறோம். குறிப்பாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர்களும் ஆளுங்கட்சி தரப்பிலே அரசினுடைய திட்டங்கள், நிதி ஒதுக்கீடு, சட்டத் திருத்தங்களைக் கொண்டுவருவது இயல்பு. ஆகவே, இப்படிப்பட்ட நல்ல ஆட்சிக்கு இலக்கணமாக நடத்துகின்ற அரசுக்கு அரிய ஆலோசனை சொல்லக்கூடியவர்கள் எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்ற தலைவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும்தான். அவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்பதை நம்முடைய பேரவைத் தலைவர்கள் வழிகாட்டியிருக்கிறார்கள்.

முற்பகல் 10–30

அதனடிப்படையிலேதான் வள்ளுவப் பெருந்தகை அவர்கள்,

'சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்துஒருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி'

என்று அழகாகக் குறிப்பிட்டிருக்கிறார். தாங்கள் நடுநிலையோடு இருந்து ஆளும் கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் இடையில் ஏற்படக்கூடிய வாதங்களையெல்லாம் சமன் செய்வதோடு,

இன்று எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிற அரசியல் கட்சிகள் ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளைச் சொல்வதற்கு நீங்கள் நல்ல வாய்ப்புகளை வழங்குவீர்கள்; இந்த அவையை மிகுந்த முக்கியத்துவத்தோடு நடத்துவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலும், ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் சார்பிலும் உங்களுக்கு நெஞ்சார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறோம். உங்களுக்கு என்றும் பாட்டாளி மக்கள் கட்சியினர் துணை நிற்போம் என்ற வாக்குறுதியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களைப் பற்றிப் பெருமையோடு நாங்கள் எண்ணிப் பார்க்கிறோம். அரசியலில் நீண்ட கால அனுபவமிக்கவர்; அடக்கமானவர்; உயர்ந்த பண்பாளர்; நெறியோடு வாழக்கூடிய ஒரு கல்வியாளர்; அமைச்சராக இருந்தவர்; 1996-ல் இதே பேரவையில் அவரோடு நாங்கள் பணியாற்றியவர்கள். தொடர்ந்து பணியாற்றிய அவரைப் பார்க்கிறோம். அரசியலைக் கடந்தும், அவரோடு நெருக்கமாகப் பழகியவன் என்ற அடிப்படையில், ஒரு நல்ல மனிதர்; பண்புள்ள மனிதர், பேரவைத் துணைத் தலைவராகப் பொறுப்பேற்றது இந்த அவைக்குப் பெருமை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் நலமோடு வாழ வேண்டும்; புகழோடு வாழ வேண்டும்; உங்கள் பணி சிறக்க வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலும், சமூக நீதி காத்த காவலர் மருத்துவர் அய்யா அவர்கள் சார்பிலும் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களும் முன்னோடிகளாக இருந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், இந்த அவைக்கும் நீங்கள் ஆதரவாக இருக்க வேண்டும். இந்த அவையை சீர்மிக்க அவையாக, சிறப்புமிக்க அவையாக, இந்திய நாட்டின் எடுத்துக்காட்டுமிக்க அவையாக நடத்த வேண்டுமென்ற அவாவை விடுத்து, உங்கள் இருவரையும் 'வாழ்க பணி சிறக்க' என்று வாழ்த்தி, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், என்னுடைய குடும்ப நண்பர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.

**திரு. நயினார் நாகேந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது பணிவு கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். உள்ளபடியே, இன்றைக்கு தாங்கள் இந்த அவையில் மாண்புமிகு பேரவைத் தலைவராக, சபாநாயகராக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது, இங்குள்ள எல்லோருக்கும் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறதோ, அதைக்காட்டிலும் பன்மடங்கு மகிழ்ச்சி எனக்கும் இருக்கிறது என்பதை நான் இந்த அவையிலே தெரியப்படுத்திக்கொள்கிறேன். காரணம், நெல்லை மாவட்டத்திற்கும், குமரி மாவட்டத்திற்கும் எல்லையாக இருக்கின்ற லெப்பை குடிகாடு என்ற குக்கிராமத்திலே பிறந்தவர். அவருடைய கிராமத்திற்கும், என்னுடைய கிராமத்திற்கும் கூப்பிடு தூரம்தான்; நடந்து போகிற தூரம் அல்ல, கூப்பிட்டுப் பேசக்கூடிய தூரம் உள்ள கிராமம். சிறு வயதிலிருந்தே அவருடைய குடும்பத்தினரும், என்னுடைய குடும்பத்தினரும் நெருங்கிய நண்பர்கள், கொள்கையில் மாறுபாடுகள், வேறுபாடுகள் நிறைய இருந்தாலும்கூட, அவரும், நானும் குமரி மாவட்டத்தில் இருக்கின்ற ஆரல்வாய்மொழி என்ற ஊரிலே உள்ள அறிஞர் அண்ணா கல்லூரியில் படித்தோம். ஒன்றாகப் படித்தோம் என்று நினைக்கக்கூடாது. உருவத்தைப் பார்த்து யாரும் எடை போட்டுவிடாதீர்கள். வயதிலே வித்தியாசம் இருக்கிறது. நானும், கன்னியாகுமரி சட்டமன்ற உறுப்பினர் திரு. தளவாய் சுந்தரம் அவர்களும் அறிஞர் அண்ணா கல்லூரியிலே ஒன்றாகப் பயின்றோம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நான் அறிஞர் அண்ணா கல்லூரியிலே முதல் மாணவன். (சிரிப்பு)* No.*1. 1969-ல் ஆரம்பிக்கப்பட்ட கல்லூரி.*

**திரு. நயினார் நாகேந்திரன்:** *இன்றைக்கும் தமிழக சட்டமன்றத்தில் முதல் பேரவைத் தலைவர் நீங்கள்தான். அதுமட்டுமல்ல, அந்தக் கல்லூரியினுடைய முதல்வராக இருந்தவரைப் பற்றி நான் இந்த சபையிலே தெரிவிக்க வேண்டும். மேல்சபையினுடைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஐயா திரு. சங்கரலிங்கம் அவர்கள் எங்கள் கல்லூரியின் முதல்வர். எல்லோரிடமும் மிகவும்* strict *ஆக இருப்பார்கள். யார் போனாலும் சட்டையில் பட்டன் போட்டுக்கொண்டுதான் போக வேண்டும். அவ்வளவு ஒழுக்கமான கல்லூரி; பெயரே அறிஞர் அண்ணா கல்லூரி. அவ்வளவு ஒழுக்கத்துடன் படித்த அந்தக் கல்லூரியில், பேரவைத்*

தலைவர் அவர்கள் எனக்கு மூத்தவர். அவர் படிக்கும்போதே பொது வாழ்க்கையில் பெரிதும் ஈடுபாடும், ஆர்வமும் கொண்டவர். அந்த வகையில், அவர்கள் வேறு இயக்கத்தில் இருந்தார்கள். நான் வேறு இயக்கத்தில் இருந்தாலும்கூட, பொது விஷயங்களுக்காகப் போராடுகிறபோது, குரல் கொடுக்கின்றபோது அதில் வந்து சேர்ந்து கொண்டு, பொது நன்மைக்காகச் செயல்படுகின்ற ஒரு நல்ல மாமனிதர், இன்றைக்கு பேரவையினுடைய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்று சொல்லும்போது, உண்மையிலேயே மனதார, உளமாரப் பாராட்டுவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு அவருடைய இயக்கம், அவரை இந்த இடத்தில் அமர வைத்திருக்கிறது. அதற்கும் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–35

சட்டமன்றத்தில் உறுப்பினராகப் பணியாற்றுவதற்கு எங்களுடைய பாரதிய ஜனதா கட்சியின் தேசிய செயல் தலைவர் திரு. ஜெ.பி. நட்டா அவர்கள், பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் எனக்கு இந்த வாய்ப்பினை வழங்கியிருக்கின்றார்கள். அதற்கு ஆதாரமாக திருநெல்வேலி தொகுதி வாக்காளப் பெருமக்கள் என்னை 23,500 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்து, மீண்டும் இந்த அவைக்கு மக்கள் பணியாற்றுவதற்கு அனுமதித்திருக்கிறார்கள்.

ஆக, திருநெல்வேலியின் மண் வாசனையைப் போல, நேர்மையும், வீரமும் போல உங்களுடைய பணி. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல, நாணயத்தின் இரண்டு பக்கங்களில், ஒரு பக்கம் சிதைந்தால் மறு பக்கம் செல்லாமல் ஆகிவிடும். ஆகவே, உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பார்க்காமல் எண்ணங்களின் அடிப்படையிலும், கொள்கைகளின் அடிப்படையிலும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நேரம் ஒதுக்கவும், எங்களைப் போன்ற எதிர்க்கட்சியினருக்கு எண்ணிக்கையைப் பார்க்காமல் அதிக நேரம் தந்தும், நியாயத்தின் அடிப்படையில் உங்களின் தீர்ப்புகள் இருக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசாங்கம் ஒரு நேர்மையான அரசாங்கமாகச் செயல்பட வேண்டும் என்று நினைத்துக்கொண்டிருக்கின்ற இந்த வேளையில், எல்லா கட்சிகளுக்கும், எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சமமாக இருந்து உங்களுடைய தீர்ப்பைச் செயல்படுத்திட நான் அன்போடு இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், பேரவையின் துணைத் தலைவர், மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி அவர்களைப் பற்றி நான் நிறைய கேள்விப்பட்டிருக்கின்றேன். அவரோடு நெருங்கிப் பழகியது இல்லை. அவர் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சார்ந்தவர். அவர், வீட்டு வசதித் துறை அமைச்சராக இருந்தபோது, திருவண்ணாமலை கோயிலுக்கு நான் நண்பர்களோடு சென்றபோது, அவரைப் பற்றி நிறைய சொல்லியிருக்கின்றார்கள். அவர் அமைதியானவர், நல்லவர், பொதுமக்களின் அன்பைப் பெற்றவர் என்று அவரைப் பற்றி நான் நிறைய கேள்விப்பட்டிருக்கின்றேன். ஆக, அவரின் பணியும் சிறக்க நான் மனதார வாழ்த்துக்கிறேன்.

உங்களுடைய பணி இந்தச் சட்டமன்றத்தில் முன்னுதாரணமாக—ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியதுபோல், நிறைய சபாநாயகர்கள் இங்கே பணியாற்றியதுபோல உங்கள் பணியும்—சிறக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 2001 ஆம் ஆண்டு நீங்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது அன்றைக்கு அண்ணன் திரு. காளிமுத்து அவர்கள் சபாநாயகராக இருந்தார்கள். அப்போது உங்கள் உயரத்தைக் கருதி மைக்கின் உயரத்தையும் உயர்த்தித் தர வேண்டுமென்று நீங்கள் கேட்டுக்கொண்டீர்கள். ஆனால், இன்றைக்கு, 234 மைக்கையும் நீங்கள் control செய்யக்கூடிய இடத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவராக வந்திருக்கின்றீர்கள். உங்களுக்கு மனதார என்னுடைய பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொண்டு, உங்கள் பணி சிறக்க வேண்டும், நீதி, நியாயம் ஒலித்தோங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அனைவருக்கும் நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.

**திரு. ம. சிந்தனை செல்வன்:** வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இந்த மாமன்றத்தின் மாண்புமிகு பேரவைத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கின்ற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் எனது சார்பிலும், நான் சார்ந்திருக்கின்ற விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பிலும், எழுச்சித் தமிழர், கட்சியின் தலைவர் முனைவர் தொல். திருமாவளவன் அவர்களின் சார்பிலும் மனம் நிறைந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

விடியல் எல்லா நாட்களிலும் வரத்தான் செய்கிறது. ஆனால், அந்த விடியல் எல்லோருக்குமான விடியலாய் அமைய வேண்டும். வெளிச்சம் எல்லா இடங்களிலும் பரவ வேண்டுமென்கிற அடிப்படையில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தன்னுடைய பணிகளைத் தொடங்கியிருக்கின்றார்கள். இந்திய நாடே பார்த்து வியக்கக்கூடிய வகையிலே, நம்முடைய முதல்வர் அவர்களின் முதற்கட்ட நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மதிப்பிற்குரிய முத்தமிழறிஞர் சமத்துவப் பெரியார் கலைஞர் அவர்களின் கொள்கை வாரிசு, குருதி வாரிசு மாத்திரமல்ல, ஐயன் திருவள்ளுவனின் கொள்ளுப் பேரனும் நான்தான் என்கின்ற அந்த அடிப்படையில்;

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்ற ஐயன் வள்ளுவனின் வாக்கிற்கு ஒப்ப இந்த மகத்தான பொறுப்பை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேரவைத் தலைவர் அவர்களுக்கு வழங்கியிருக்கின்றார்கள். பேரவைத் துணைத் தலைவர் தேர்தலிலும் அதனை வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். மதிப்பிற்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்களையும் இத்தருணத்திலே நெஞ்சார வாழ்த்துகின்றேன்.

அவை முன்னவர், எதிர்க்கட்சித் தலைவர், என்னுடன் வருகைத் தந்திருக்கின்ற விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள், தோழமைக் கட்சியைச் சார்ந்த அனைத்து உறவுகள், நண்பர்கள் அனைவருக்கும் என்னுடைய மனம் நிறைந்த வணக்கங்களை இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–40*

இத்தகைய மாமன்றத்தை என் போன்றவர்கள் வாசித்து அறிந்திருக்கிறோமே தவிர, வந்து பார்த்ததில்லை. ஒடுக்கப்பட்ட விளிம்பு நிலை சமூகத்திலிருந்து இந்த மாமன்றத்திற்கு வருகிற வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன். ஜனநாயகம் என்பது இந்திய மரபின் தவிர்க்க முடியாத ஓர் அங்கம் என்று புரட்சியாளர் அம்பேத்கர் தெளிவுபடுத்தியிருக்கிறார். அதை இங்கிலாந்தோ அல்லது மேலை நாடுகளோ நமக்குக் கையளித்த கொடை என்பதைத் தாண்டி, இந்த நாடு ஜனநாயகப் பண்புகளை உலகத்திற்கு அளித்த நாடு. பௌத்தம் செழித்தோங்கிய இந்த

மண்ணில் சங்கம் என்கிற ஜனநாயக வடிவத்தை உலகத்திற்கு இது அளித்திருக்கிறது என்பதை அவர் தெளிவுபடுத்தியிருக்கிறார். ஆகவே ஜனநாயக மரபுகள் நிறைந்த இந்த மண்ணிலே ஜனநாயகத்தைப் பாதுகாக்கக்கூடிய பெரும் பொறுப்பை மாண்புமிகு முதல்வர் அவர்களும், இந்த மாமன்றமும் உங்களுக்கு பொருத்தமாகவே அளித்திருக்கிறது என்பதை அறிந்து நான் மகிழ்கிறேன். மீண்டும் நெஞ்சார வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிலர் வெற்றியால் அறியப்படுவார்கள். நீங்கள் வெற்றிகளையும் பெற்றவர், தோல்விகளையும் சந்தித்தவர். ஆனால், உங்கள் தோல்வி அகில இந்திய அளவிலே பேசப்பட்ட ஒன்றாக கடந்த முறை அமைந்திருந்தது. புதுடில்லியில் நடைபெற்ற தேர்தல் சீர்த்திருத்தம் தொடர்பான கருத்தரங்கம் ஒன்றிலே நான் கலந்து கொண்டபோது, புதுடில்லியில் இருந்த பேராசிரியர்கள் உங்களது கடந்த தேர்தலில் ஏற்பட்ட தோல்வி அனுபவத்தைத் தேர்தல் சீர்த்திருத்தம் தொடர்பான கருத்தரங்கில் ஒரு சான்றாக வைத்துப் பேசுகிற அளவிற்கு அது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது. தேர்தல் நடைமுறைகளில் சீர்த்திருத்தம் வேண்டும் என்று சொல்லப்படுவதற்கான ஓர் அனுபவமாக அது அமைந்தது என்பதை இந்தத் தருணத்திலே மெத்தப் பணிவோடு நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு'

என்று ஐயன் திருவள்ளுவர் சொல்வார். பண்பான வேந்தனுடைய நிழலில், குளிர்ச்சியான நிழலில் இந்த உலகம் இளைப்பாறுகிறது. அப்படிப்பட்ட மகத்தான தலைவராக மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் பார்க்கிறேன். இந்தத் தருணத்திலே பண்புடை வேந்தன் என்று ஐயன் திருவள்ளுர் சொல்கிறபோது, 'செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்' என்று இன்னொன்றையும் சேர்த்து சொல்வார். கடுமையாக செவிகளை தைக்கக்கூடிய கடுஞ்சொற்களைக்கூட பொறுத்து, அதை ஏற்றுக்கொள்கிற பண்புடைய அரசினுடைய நிழலில்தான் இந்த உலகம் அமைதியாக இளைப்பாறுமென்று சொல்வார். அத்தகைய ஜனநாயக பண்புகளைப் பாதுகாக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர்

அவர்கள், உங்களை முன்மொழிந்து, இந்தப் பேரவை அதை ஏற்றுக்கொண்டிருப்பதை எண்ணி நான் பெருமைகொள்கிறேன்.

ஒன்றை மாத்திரம் சொல்லி, என் உரையை நிறைவு செய்ய விரும்புகிறேன். ஜனநாயக மரபுகளைப் பாதுகாக்க வேண்டிய ஒரு நெருக்கடியான சூழலில் இந்த தேசம் இருக்கிறது என்று நான் உணர்கிறேன். எழுச்சித் தமிழர் மரியாதைக்குரிய தலைவர் அண்ணன் தொல். திருமாவளவன் அவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் காவேரிக் கரையில் நடத்திய மாபெரும் மாநாட்டிலே 'இந்த நாடு ஜனநாயகத்தை மீட்டெடுப்பதற்காக நடத்திய போர், முதல் சுதந்திரப் போர் பெற்ற ஜனநாயகத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்கான இரண்டாவது சுதந்திரப் போரை நாம் மேற்கொள்ள வேண்டும்' என்று, மாண்புமிகு இன்றைய முதல்வர் அவர்கள் அந்த மேடையிலே சொன்னார்கள். ஆகவே, ஜனநாயக மரபுகளைப் பாதுகாக்கக்கூடிய பெரும் பொறுப்பை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஏற்றிருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களையும் நான் இந்த நேரத்திலே நெஞ்சம் நிறைந்து வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்கள் ஊரிலே தங்கள் பெயரில் ஒரு பேருந்து இருக்கும். சின்ன வயதிலே அந்த பேருந்திலே ஏறித்தான் நாங்கள் நகரத்திற்குச் செல்வோம். ஆகவே, ஏழையெளிய மக்களை நகர்ப் பகுதிக்குக் கொண்டு செல்கிற அந்த பேருந்தைத் தாங்கிய அடையாளத்தை இப்போது நான் எண்ணிப் பார்க்கிறேன். தங்களையும் மனம் நிறைந்து, நெஞ்சம் நிறைந்து வாழ்த்துகிறேன். இந்த வாய்ப்பை எனக்கு அளித்திருக்கிற உங்கள் அனைவருக்கும் எனது அன்பையும், வணக்கத்தையும் பதிவு செய்து உரையை நிறைவு செய்கிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள்.

*முற்பகல் 10–45*

**டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். பதினாறாவது சட்டப் பேரவையின் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தாங்கள் எங்கள் நெல்லை சீமையில் ராதாபுரம் வட்டத்தில் உள்ள லெப்பை குடிகாடு கிராமத்தில் பிறந்தவர் என்பது எனக்குத்

தெரியும். சிறந்த மாணவர்களை உருவாக்கும் ஆசிரியராகப் பணியாற்றி, பொது வாழ்வில் கொண்ட ஈடுபாடு காரணமாக ஆசிரியர் பணியினைத் துறந்தவர்கள். அடித்தட்டு மக்களின் பிரச்சினைகளுக்காக வீதியில் இறங்கிப் போராடி வந்தவர்கள் தாங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இனிமையாகப் பழகக்கூடியவர்; பண்பாளர். இயக்கத்தின் கொள்கைகளை ஊடக விவாதங்களில் எடுத்துச் சொல்லி அனைவரின் கவனத்தையும் ஈர்த்தவர் நீங்கள். கண்ணெதிரே நடக்கும் அநீதியை எதிர்க்கும் துணிவு கொண்டவர். ஏற்கெனவே மூன்று முறை இப்பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்பாகப் பணியாற்றிய பெருமைக்குரியவர். தாமிரபரணி நாயகன் என்ற பட்டப் பெயரைப் பெற்றவர் நீங்கள். இதுவரை இப்பேரவையின் தலைவராக இருந்துள்ளவர்கள் உட்பட ஐவர் எங்கள் நெல்லை சீமையைச் சேர்ந்தவர்கள் என்கின்ற பெருமை எங்கள் பகுதிக்குக் கிடைத்த தனிப் பெருமை. எங்கள் தென்கோடி மண்ணிலிருந்து பேரவைத் தலைவரைத் தேர்ந்தெடுத்தமைக்கு எங்கள் தெற்கு சீமையின் சார்பில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் ஆருயிர் தலைவர் திரு. வைகோ அவர்கள் வாழ்த்துகளைத் தெரிவித்திருக்கின்றார்கள். என்னுடைய சார்பிலும், நான் சார்ந்திருக்கின்ற கட்சியின் சார்பாகவும், என்னோடு சேர்ந்திருக்கின்ற உறுப்பினர்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எங்கள் தெற்கு சீமைக்கு பெருமை தேடித் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அவை சிறக்க, தாங்கள் நடுநிலையோடு செயல்படுவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. நீங்கள் 'சிறந்த அவைத் தலைவர்' என்று பெயரெடுக்க வேண்டும். ஏற்கெனவே நெல்லை சீமையைச் சேர்ந்த ஐயா செல்லபாண்டியன் அவர்கள், ஐயா பி.எச். பாண்டியன் அவர்கள், ஐயா சி.பா. ஆதித்தனார் அவர்கள் ஆகியோரைப் போன்று நீங்கள் பணிபுரிய வேண்டும். அண்ணாச்சியார் ஆவுடையப்பன் போன்றும் நீங்கள் பணிபுரிய வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொண்டு, நான் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எனக்கு இந்த வாய்ப்பளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், தங்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

*2021 மே 12*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

**திரு. ட்டி. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த 16–வது பேரவையின், சட்டப் பேரவைத் தலைவராகப் போட்டியின்றி ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தங்களுக்கு, என் சார்பாகவும் நான் சார்ந்துள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகவும் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். நான்கு முறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, மூன்று முறை இந்தச் சட்டமன்றத்திலே நல்ல முறையில் பணியாற்றி, நீண்ட நெடிய அனுபவமுள்ள ஒரு பண்பாளர் தாங்கள். இந்த அவையில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி, எதிர் வரிசையில் இருக்கின்ற கட்சி என்று பாராமல் நடுநிலையோடு இருந்து இந்தச் சட்டமன்றத்தில் நடைபெறுகின்ற ஆக்கப்பூர்வமான அனைத்து நடவடிக்கைகளுக்கும் நடுநிலையோடு நீங்கள் தீர்ப்பளிப்பீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது.*

*சட்டமன்றத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற மரியாதைக்குரிய திரு. கு. பிச்சாண்டி அவர்கள் ஆறு முறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்பான முறையில் பணியாற்றியிருக்கின்றார்கள். அதேபோல வீட்டு வசதித் துறை அமைச்சராகவும் பணியாற்றியிருக்கின்றார்கள். நீண்ட நெடிய அனுபவமிக்கவர். அவர்களுக்கும் என் சார்பாகவும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகவும் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பாக போட்டியிட்ட எனக்கு, கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வருகை தந்து தேர்தல் பரப்புரையாற்றி வெற்றி பெறச் செய்த தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் மரியாதைக்குரிய அண்ணன் தளபதி அவர்களுக்கும், அதேபோல, தளி தொகுதிக்கு வருகைத் தந்து, தளியிலே தேர்தல் பிரச்சாரம் செய்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இளைஞரணிச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய அண்ணன் திரு. உதயநிதி*

ஸ்டாலின் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் மரியாதைக்குரிய திரு. டி. ராஜா அவர்களுக்கும், மாநிலச் செயலாளர் திரு. முத்தசரன் அவர்களுக்கும், தேர்தல் களத்தில் எனக்காகப் பணியாற்றிய தோழமைக் கட்சியினுடைய தலைவர்களுக்கும், நிருவாகிகளுக்கும், மூன்றாவது முறையாக வாக்களித்து வெற்றி பெறச் செய்த தளி சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், கிருஷ்ணகிரி மாவட்ட மக்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–50*

"தளபதிதான் வாராரு;
விடியல் தர போறாரு" (மேசையைத் தட்டும் ஒலி) என்ற பாடல் வரிகளுக்கேற்ப, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சட்டமன்றத்திலும், வெளியிலும் எடுக்கின்ற அனைத்து ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளுக்கும் தோழமைக் கட்சியான இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தங்களுக்குத் துணை நிற்கும் என்று தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.

**திரு. வி.பி. நாகைமாலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாமன்ற உறுப்பினர்களே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய சிரம்தாழ்ந்த வணக்கத்தை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பேரவையினுடைய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தங்களுக்கும், துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற திரு. கு. பிச்சாண்டி அவர்களுக்கும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் முதலில் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வதில் மிகவும் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அரசியல் வாழ்க்கையிலும், சட்டமன்றத்திலும், நீண்ட நெடிய அனுபவம் கொண்டவர்; அதனடிப்படையில் பலவற்றைக் கற்றறிந்தவர்கள் நீங்கள். அந்தவகையில், சிறப்புமிக்க இந்த அவையை, எல்லோரும் பாராட்டும்வகையில் வழிநடத்துவீர்கள் என்கிற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. எங்களைப்போன்ற சிறிய எண்ணிக்கையிலுள்ள

*சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, எங்களுடைய கருத்துகளை இந்த மாமன்றத்தில் பதிவு செய்வதற்கான போதிய நேரத்தை ஒதுக்கித் தந்து உதவுமாறு இந்த நேரத்தில் நான் தங்களை அன்போடு வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். இந்த அவையினுடைய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற தங்களுக்கும், துணைத் தலைவர் அவர்களுக்கும் மீண்டும் எனது சார்பிலும், எனது சக சட்டமன்ற உறுப்பினர் திரு. சின்னதுரை அவர்கள் சார்பிலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும் நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்து அமருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைவரையும் ஒருங்கிணைத்து, தமிழகத்திற்குப் புதிய விடியலைத் தந்துகொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) சக சட்டமன்ற உறுப்பினர்களே, உங்கள் அனைவர்மீதும் இறைவனின் பேரருள் பொழியப்படட்டும் என்று பிரார்த்தித்து, உரையைத் தொடங்குகின்றேன்.*

*பதினாறாவது தமிழக சட்டமன்றப் பேரவையின் தலைவராக நீங்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கின்றது. பேரவையின் துணைத் தலைவராக மாண்புமிகு திரு. பிச்சாண்டி அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதும் மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கின்றது. நீங்கள் இருவரும் இந்த பதினாறாவது சட்டமன்றப் பேரவையில் சிறப்பான பணிகளை நிறைவேற்றுவதற்கு நான் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். நம்முடைய முதல் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், சபாநாயகரைப் பற்றிக் குறிப்பிடும்போது,* "The Speaker represents the House, He/She represents the dignity of the House, the freedom of the House and because the House represents the nation in a particular way, the Speaker becomes symbol of the nation's freedom and liberty. Therefore, that should be an honoured position. A free position and should be occupied always by persons of outstanding ability and impartiality" *என்று குறிப்பிட்டார்.*

*முற்பகல் 10–55*

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2021 மே 12

தமிழிலே சொல்ல வேண்டுமென்றால், சட்டமன்றப் பேரவையின் பிரதிநிதியாக, ஒட்டுமொத்த பேரவையின் பிரதிநிதியாக சபாநாயகர் விளங்குகிறார். பேரவையின் கண்ணியத்தைப் பிரதிபலிப்பவராக, அதன் சுதந்திரத்தின் அடையாளமாக அவர் திகழ்கிறார். பேரவை ஒரு குறிப்பிட்ட வகையில், நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்துவதால், நாட்டில் நிலவும் சுதந்திரத்தின் சின்னமாக சபாநாயகர் விளங்குகிறார். எனவே, சபாநாயகர் பதவி என்பது கண்ணியத்திற்குரியது, சுதந்திரமானது, ஆற்றல் மிகுந்த பாரபட்சம் இல்லாதவர்களால் மட்டுமே அந்தப் பதவி நிரப்பப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார் பண்டிட் நேரு. நாட்டின் முதல் பிரதமர் நேரு அவர்கள் சபாநாயகருக்கு வகுத்துள்ள இலக்கணங்களை எளிமையாகக் கொண்டவராக, உங்களை இந்தப் பேரவையின் தலைவராக நாங்கள் பார்க்கின்றோம். ஆசிரியர் பணியிலிருந்து பொது வாழ்வைத் தொடங்கி, ஒரு போராளியாக, சளைக்காமல் களத்தில் நின்று, இன்று அரசியல் ஞானியாக நீங்கள் உயர்ந்து நிற்கின்றீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊடக விவாதங்களில் முத்தாய்ப்பான கருத்துகளால் முத்திரைப் பதித்த நீங்கள், இந்த அவையை நடத்துவதில் முத்திரைப் பதிப்பீர்கள் என்று முழுமையாக நாங்கள் நம்புகிறோம். வறண்டு கிடந்த ராதாபுரம் தொகுதிக்கு தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைக் கொண்டுவந்து மக்களின் தாகம் தணித்ததால் 'தாமிரபரணி நாயகர்' என்று மக்களால் போற்றப்படும் நீங்கள், இந்தப் பேரவையின் விவாதங்களும் வறண்டு போகாமல், உற்சாகம் நிறைந்ததாக மாற்றுவீர்கள் என்பது நிச்சயம். தொகுதி மக்கள் அனைவரையும் பேர் சொல்லி அழைக்கும் நெருக்கமும், தோழமையும் உங்களின் தனித்தன்மை. இதே அடிப்படையில், இந்தப் பேரவையின் ஒவ்வோர் உறுப்பினரையும், நீங்கள் அரவணைப்பீர்கள் என்பதிலே மாற்றுக் கருத்து இல்லை. ராதாபுரம் தொகுதியில் பெரும்பாலான கோயில்களுக்கு மேடை அமைத்துக் கொடுத்தும், திருப்பணிகளுக்கு உதவியும் செய்துள்ள கிறிஸ்தவரான மாண்புமிகு பேரவைத் தலைவரான உங்களை இஸ்லாம் மார்க்கத்தின் நெறி நிற்கும் ஜவாஹிருல்லாவாகிய நான் வாழ்த்திப் பேசுவது இம்மண்ணின் பெருமை, திராவிட இயக்கத்தின் பெருமை என்பதைப் பெருமிதத்தோடு கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் தொடர் போராட்டக் குணத்திற்கு பரிசாக இந்தப் பொறுப்பு அமைந்திருக்கின்றது. வழக்கிற்காக ஓடித் தேய்ந்த உங்கள் கால்கள்,

*2021 மே 12]* *[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]*

*இனி சபாநாயகராக அமர்ந்து அவை நடவடிக்கைகளுக்குத் தீர்ப்பு எழுதட்டும் என்று வாழ்த்துகிறேன். பழுத்த சட்டப் பேரவை அனுபவம் கொண்ட மாண்புமிகு திரு. பிச்சாண்டி அவர்கள், துணை சபாநாயகராக மிகச் சிறப்பாகச் செயல்படுவார் என்பது நிச்சயம். அவரையும் வாழ்த்தி விடைபெறுகின்றேன். நன்றி.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.*

**திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்:** *மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே மற்றும் இந்த மன்றத்திலே அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு சக சட்டமன்ற உறுப்பினர்களே, அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதல்முதலாக இந்தச் சட்டமன்றத்திலே நுழைந்து நான் பேசுகின்ற என்னுடைய பேச்சு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை வாழ்த்திப் பேசுகின்ற ஒரு வாய்ப்பாக அமைந்திருக்கிறது. அதை பெருமையாகக் கருதுகின்றேன். இந்தச் சட்டமன்றத்திற்குள்ளே வருவதற்கும், இன்றைக்குப் பேசுவதற்கும் காரணமாக இருக்கின்ற தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பலபேர் வாழ்த்திப் பேசிய பின்னால், திரும்ப வாழ்த்திப் பேசுவதற்குக் கருத்துகளைத் தேடுவது கடினம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும் அங்கிருந்து, எப்போது முடிப்பார் என்று பார்த்துக்கொண்டேயிருக்கிறார். எல்லோரும் பேசாத ஒரு கருத்தைச் சொல்லி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை நானும் வாழ்த்தி விடைபெறுகின்றேன்.*

*முற்பகல் 11–00*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இந்தப் பெருமைமிக்க சட்டமன்றத்தினுடைய இரண்டாம் நூற்றாண்டிலே முதன்முதலாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பேரவைத் தலைவர் நீங்கள். இன்னொன்று, திருநெல்வேலியிலிருந்துதான் அதிகமான பேரவைத் தலைவர்கள் இந்த சட்டமன்றத்தை அலங்கரித்திருக்கிறார்கள். அந்த வகையில், மறுபடியும் ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து சட்டமன்றப் பேரவைத் தலைவராக*

நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்தச் சபையை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றீர்கள். அதாவது ஒரு மன்னன் தன்னுடைய படைத் தளபதிகளை சரியாகத் தேர்ந்தெடுத்துவிட்டால், அந்த மன்னன் பாதி போரை வென்று விட்டான் என்று சொல்வார்கள். அதைப்போல தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த இரண்டு, மூன்று நாட்களிலே, அவருடைய செயல்பாடுகளிலே, பல்வேறு பொறுப்புகளுக்குப் படைத் தளபதிகளைத் தேர்ந்தெடுத்ததைப் பார்த்து, தமிழகமே இன்றைக்கு அவர்மேல் நம்பிக்கைக் கொண்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) 50 சதவிகிதம் அல்ல, 100 சதவிகிதம் வென்றுவிட்டோம் என்று இன்றைக்கு நம்பிக் கொண்டிருக்கின்றது.

இந்தச் சட்டமன்றம் ஐந்து ஆண்டுகளுக்கும், சுமூகமாக, சிறப்பாக நடக்க வேண்டுமென்று, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை முன்மொழிந்து, இன்றைக்கு இங்கே அவரை அமர வைத்து அழகு பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். எல்லா உறுப்பினர்களுக்கும் வாய்ப்புகளைத் தரவேண்டும்; எல்லா கட்சிகளுக்கும் சமமான வாய்ப்புகளைத் தர வேண்டுமென்பதில் மாற்றுக் கருத்து கிடையாது. இன்றைக்கு இந்தச் சபை மாறுபட்ட சிந்தனைகளை, மாறுபட்ட கொள்கைகளை, மாறுபட்ட சித்தாந்தங்களைக் கொண்ட உறுப்பினர்கள் நிறைந்த சபை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அதிக சகிப்புத் தன்மை கொண்டவர். சட்டமன்ற உறுப்பினராகத் தான் வென்றுவிட்டோம் என்று தெரிந்தும்கூட ஐந்து ஆண்டுகள் அவர் அமைதியாக இருந்திருக்கிறார் என்று சொன்னால் அவர் எவ்வளவு சகிப்புத் தன்மை வாய்ந்தவர். (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு ஊடக விவாதங்களில் அவருடன் நான் விவாதித்திருக்கின்றேன். உண்மையை அடித்துச் சொல்வதற்கு, உண்மையை நிரூபிப்பதற்கு மிகவும் பாடுபடுவார். அப்படித்தான் தீர்ப்பிற்காகக் காத்திருந்த நீங்கள், இன்றைக்கு இந்த மன்றத்தில் தீர்ப்பு சொல்கின்ற இடத்தில் அமர்ந்திருக்கின்றீர்கள் என்பதை மட்டும் நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) எப்படி எல்லோருக்கும் வாய்ப்பைத் தர வேண்டுமோ, அப்படி இந்தச் சட்டமன்றத்தில் பேசக்கூடியவையெல்லாம் தமிழகத்தினுடைய வளர்ச்சிக்காக இருக்க வேண்டும்; ஆக்கப்பூர்வமாக இருக்க வேண்டும்; சட்டமன்றத்தின் நேரம் வீணடிக்கப்படக் கூடாது. அதையும் நீங்கள் உறுதி செய்ய வேண்டிய அந்தக் கட்டாயத்தில் இருக்கின்றீர்கள். அவற்றையெல்லாம் நீங்கள் செய்வீர்கள் என்ற அந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

நான் ஒன்று கேள்விப்பட்டேன். உங்கள் தொகுதியில், நீங்கள் நடந்து செல்லும்போது, டீக்கடையில், யாராவது வேலையில்லாமல் அமர்ந்திருந்தால், உடனே அவர்களை அழைத்து, “ஏன் வேலைக்கு போகவில்லை? என்ன பிரச்சினை?” என்று கேட்டு, அவர்கள் “வேலையில்லை” என்று சொன்னால், “அவர்களுக்கு வேலை வாங்கிக்கொடுத்து, வேலைக்குச் செல்லச் சொல்வீர்கள்” என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதைத்தான் நான் இங்கும் எதிர்பார்க்கின்றேன். சட்டமன்றத்தில் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் செயல்படுவதை உறுதி செய்வீர்கள் என்று நான் நம்புகின்றேன். ஏதோ சோர்வின் காரணமாக, எந்த உறுப்பினராவது கண் அசந்தால்கூட விடமாட்டீர்கள் என்று நினைக்கின்றேன். கண்டிப்பாக ஒரு சிறந்த பேரவைத் தலைவராக, மிகச் சிறப்பாக நீங்கள் பணியாற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. இந்த நேரத்தில் வாழ்த்துவதற்கேற்ற வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்ததைப் பெருமையாகக் கருதுகிறேன்.

இன்றைக்கு உலக செவிலியர் தினம். கொரோனா நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிற அத்தனைப் பேரையும் பாதுகாக்கின்ற வேலையை உலகத்தில் இருக்கிற செவிலியர்கள் இன்றைக்குச் செய்து கொண்டிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட இந்த நாளில் நீங்கள் இந்தப் பொறுப்பை ஏற்றிருக்கிறீர்கள். தீர்ப்புகளை மிகச் சரியாகச் சொல்லி, இந்தச் சபையை மிகச் சிறப்பாக கண்டிப்பாக நடத்துவீர்கள் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, துணைத் தலைவர் அவர்கள். குறை என்று சொல்வதற்கு அவரிடத்தில் ஏதுமேயில்லை என்று எல்லோரும் சொல்லிவிட்டார்கள். அதுதான் மிகவும் கஷ்டம். ‘நல்லவன், நல்லவன்’ என்று சொன்னால், நல்லவன் என்ற அந்தப் பெயரைக் கடைசி வரை காப்பாற்றுவது மிகவும் சிரமம். நீங்கள் தொடர்ந்து காப்பாற்றிக் கொண்டிருக்கின்றீர்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு உறுதுணையாக, இந்தச் சட்டமன்றப் பேரவையைச் சிறப்பாக நீங்கள் நடத்திச் செல்வீர்கள் என்ற நம்பிக்கையும் எங்களுக்கு இருக்கிறது. மீண்டும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், இந்த வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்த மாண்புமிகு தமிழக முதலைமைச்சர் அவர்களுக்கும் நன்றி பாராட்டி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சட்டமன்றப் பேரவையில் தாங்கள் பேரவைத் தலைவராகவும், மாண்புமிகு அண்ணன் திரு. கு. பிச்சாண்டி அவர்கள் பேரவைத் துணைத் தலைவராகவும், ஏகமனதாக இந்த அவையினால் தேர்வு செய்யப்பட்டு, அமர்ந்திருக்கிற தங்களை தமிழக வாழ்வுரிமை கட்சியின் சார்பாக மனதார வாழ்த்துகிறேன்.

ஓர் அரசியல் இயக்கத்தைத் தனியாகத் தொடங்கி, அந்த இயக்கம், பேரவைத் தலைவரை வாழ்த்துகிற இடத்திற்கு வர வாய்ப்பளித்த திராவிட முன்னேற்றக் கழகம்; திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர், முத்தமிழறிஞர், தலைவர் கலைஞர் அவர்களை என் நெஞ்சில் நிறுத்தி, அவருடைய அரசியல் வரலாற்றுச் சுவடுகளைத் தடம் மாறாமல் பின்பற்றி வந்து, இன்றைக்கு இந்த அவைக்கு நான் மூன்றாம் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு தங்களையும், துணைத் தலைவர் அவர்களையும் வாழ்த்திப் பேசுகிற இந்த நல்வாய்ப்பை பெற்று, இங்கு நின்று கொண்டிருப்பதற்குக் காரணமாக இருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் தளபதியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், இந்த அவையில் என்னோடு பயணிக்கின்ற சக சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு வாய்ப்பைத் திராவிட முன்னேற்றக் கழகம் வழங்கியது. ஆனால், கட்சியில் இடம் ஒதுக்கப்பட்டாலும், வாக்களிக்க வேண்டிய என் பண்ருட்டி தொகுதி மக்கள் மூன்றாவது முறையாக வாக்களித்து, இந்த அவைக்கு என்னை அனுப்பி வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த நேரத்தில், என் கைக்கூப்பி, நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

இந்த அவையை நான் சற்று உன்னிப்பாகக் கவனித்து வருகிறேன். காரணம், இந்தப் பேரவையில் உறுப்பினராக நான் பணியாற்றிய காலத்தில், இந்த அவையினுடைய நடவடிக்கைகளை பல்வேறு வார இதழ்களில் ஓர் எழுத்தாளராக எழுதியிருக்கிறேன். ஆனால், இந்த 16–வது சட்டமன்றம் தொடங்கப்பட்ட நேற்றிலிருந்து, ஒரு புதிய மாண்பை தமிழகத்தின் வரலாற்றில், இந்தச் சட்டப்

பேரவை கண்டிருக்கிறது. அதுவும் தங்கள் காலத்தில் இன்னும் சிறப்பாக இருக்குமென்கிற நம்பிக்கை எனக்கு துளிர் விட்டிருக்கிறது. பிரதான எதிர்க்கட்சியினுடைய சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்கள் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு வணக்கம் செலுத்துவதும், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டப் பேரவை உறுப்பினர்களும், மிகச்சிறந்த ஆளுமைகளும், எதிர்க்கட்சி வரிசைக்கும், எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் வணக்கம் சொல்கிற இந்த மாண்பும், நிச்சயமாக இந்தக் கூட்டத் தொடரில் நான் காண்கின்ற ஒரு புதிய மாண்பாக இதைக் கருதுகிறேன்.

தலைவர் கலைஞர் அவர்கள் இருந்தபோதும் நான் இந்த அவையில் இருந்தேன். மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மையார் அவர்கள் இருந்தபோதும் நான் இந்த அவையில் இருந்தேன். ஆனால், எங்கே தன் கட்சித் தலைமை ஏதாவது குறை கண்டுவிடுமோ என்ற ஐயத்தின் காரணமாக, இந்த ஜனநாயக மாண்புகளெல்லாம் இந்த மண்ணில் சிலகாலம் மறக்கப்பட்டிருந்தது. ஆனால், அந்த மாண்பை மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் நிலைநிறுத்தியிருக்கிறார் என்று நினைக்கின்றபோது உண்மையிலேயே மகிழ்ச்சி. (மேசையைத் தட்டும் ஒலி) அவர் நிலைநிறுத்தியதோடு மட்டுமல்ல. திராவிட இயக்கம் சமூக நீதிக் கோட்பாட்டில் வந்த தலைவர்களின் வம்சவழி இயக்கம் என்பதனால், நாளைய இளைய தலைமுறையினரின் நம்பிக்கை நட்சத்திரமாக இன்றைக்கு இருக்கிற என்னுடைய அன்புக்குரிய சகோதரர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்கூட, (மேசையைத் தட்டும் ஒலி) என்னைத் தொடங்கி, கழகத்தின் பேச்சாளராக இருக்கிற திரு. திண்டுக்கல் ஐ. லியோனி அவர்கள் வரை வீடு தேடிச் சென்று, அன்பைப் பெறுகின்ற, நன்மதிப்பைப் பெறுகின்ற அளவுக்கு, இந்த இயக்கத்தை பண்பட்ட ஓர் இயக்கமாக தளபதி அவர்கள் வழிநடத்துகிறார். அதோடு மட்டுமல்ல, இந்த இயக்கம் வெற்றி பெறக்கூடாது என்று நினைத்தவர்கள்கூட, பாராட்டுகிறார்கள்; தளபதி தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக வர முடியாது என்று சபதமிட்டவர்கள்கூட, ஐந்து அற்புதமான திட்டங்களின் வழியாக மனமார ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். நிச்சயம் ஸ்டாலின் வரப்போகிறார்; தமிழ்நாட்டுக்கு நல்லது செய்யப்போகிறார் என்ற வரிகளை உண்மையாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சட்டப் பேரவையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் உடல்நிலை பாதிக்கப்பட்டு, ஓய்வெடுத்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு விஜயகாந்த் அவர்களை வீடுதேடிச் சென்று பார்த்து, நன்றி கூறுகிற அந்தப் பண்புதான் திராவிட இயக்கத்தின் பண்பு; அதுதான் சமூக நீதிக் கோட்பாட்டின் பண்பு. அந்த சமூக நீதிக் கோட்பாட்டின் பண்பு சில காலம் இங்கு காணாமல் போயிருந்தது. சில சட்டப் பேரவைத் தலைவர்கள், தமிழக மக்களால் வெறுக்கக்கூடியவர்களாக இருந்திருக்கிறார்கள். எத்தனையோ சட்டப் பேரவைக் குறிப்புகள் வரலாறாக இருக்கின்றன. சட்டப் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் பாராட்டக்கூடிய, போற்றக்கூடிய, தமிழக மக்களுடைய மனங்களில் இடம்பெறக்கூடிய சட்டமன்றப் பேரவைத் தலைவராக இருந்ததில்லை. தனி நீதிமன்றங்கள், கூண்டுகளாக மாற்றப்பட்ட வரலாறுகளை நாம் கண்டிருக்கிறோம். ஆனால், வானளாவிய அதிகாரம் இருக்கிறதென்று, சட்டமன்றத்தின் மாண்பைத் தூக்கி நிறுத்திய தலைவர்களையும் கண்டிருக்கிறோம். மதிப்பிற்குரிய ஆதித்தனார், திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்—அவர்களுடைய பரம்பரை, பன்னீர்செல்வம் பரம்பரை என்று சொல்லக்கூடிய நீதிக்கட்சிக்குரிய அந்த பண்பாடுகளோடு, தலைமைப் பண்புகளோடு—பல தலைவர்கள் வீற்றிருந்த இந்த அவையில், இன்றைக்கு நீங்கள் பொறுப்பேற்றிருக்கிறீர்கள்.

நான் ஒற்றை ஆளாக வந்திருக்கிறேன். நீங்களும் சில காலம் ஒற்றை ஆளாக நின்று போராடியிருக்கிறீர்கள். ஏனைய சட்டப் பேரவை உறுப்பினர்கள் கூறியதுபோல், நான் உங்களோடு பல குழுக்களில் இடம்பெற்றிருந்தேன். முத்தமிழறிஞர் தலைவர் அவர்களால் எனக்குத் தரப்பட்ட அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் பொறுப்பேற்று, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று நாங்கள் ஆய்வு செய்தபோது, நீங்கள் என்னுடன், உங்கள் தொகுதியையும் தாண்டி, அந்த மாவட்டம் முழுவதும் பயணம் செய்து, அன்புடன் பேச வேண்டிய அதிகாரிகளிடம் அன்புடன் பேசி, விரட்ட வேண்டியவர்களை விரட்டி, தன் தொகுதிக்கும், தன் மாவட்ட மக்களுக்கும் நல்லது செய்ததை நான் அறிவேன். அந்த வகையில், ஒற்றை ஆளாக நின்று, அதிகமான கேள்விகளைக் கேட்பது, துணைக் கேள்விகளைக் கேட்பது, ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொண்டு வருவது, வெட்டுத் தீர்மானங்களைக்

கொண்டு வருவது என எல்லா இடத்திலும் மாண்புமிகு பேரவைத் தலைவருக்கும், வேல்முருகனுக்கும் சில போட்டிகள் உண்டு. ஆனால், இப்போது நீங்கள் தலைவராக இருக்கிறீர்கள். அந்த இடங்களில் பேரவைத் தலைவரே, நீங்களே அதிகக் கேள்விகளைக் கேட்டவர்கள்; ஒத்திவைப்புத் தீர்மானம் தந்தவர்கள்; வெட்டுத் தீர்மானம் தந்தவர்கள், துணைக் கேள்வி கேட்டவர்கள் என்கிற போட்டியிலிருந்து எங்கள் அண்ணன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தீர்ப்பளிக்கும் இடத்திற்கு வருகைத் தந்திருக்கிறீர்கள். அப்படி ஒரு வாய்ப்பைத் தந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவராக இருக்கக்கூடிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அண்ணன் திரு. கு. பிச்சாண்டி அவர்களோடும் இந்த அவையில் இரண்டு முறை நான் பணியாற்றியிருக்கிறேன். மிகவும் கண்ணியமானவர்; Unparliamentary words என்று சொல்லக்கூடிய வார்த்தைகளை அவர் பேசியதே கிடையாது; சிரித்த முகத்தோடு, அன்போடு பழகக்கூடியவர்; அனைவரையும் அரவணைத்துச் செல்லக்கூடியவர்; அந்தளவுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைமை அவரை வளர்த்திருக்கிறது.

தலைவர் அவர்களால் வழங்கப்பட்ட பதவியான குழுவின் தலைவராக நான் அந்த மாவட்டத்துக்குச் சென்றபோது, அமைச்சர்களாகப் பொறுப்பு வகித்தவர்கள்கூட எந்தவித ஈகோவும் பார்க்காமல் என்னை வரவேற்று, ஆய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள். அந்தளவுக்கு திராவிட இயக்கத்தினுடைய வழித்தோன்றல்களாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தோழர்களை, அந்த இயக்கத்தினுடைய முன்னோடி தளபதிகளை, கடைக்கோடி தொண்டர்களை இன்றைக்கு தலைவர் கலைஞர் அவர்களுடைய வழியில் நின்று, தளபதி அவர்கள் வழிநடத்துகிறார் என்கிறபோது, உண்மையிலேயே நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

வாக்களித்து என்னை வெற்றிபெற வைத்த என்னுடைய தொகுதி மக்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை வாழ்த்தி விடைபெற்றுக்கொள்ளலாமா,

தலைவர்கள் அனைவருக்கும் வாழ்த்துகளைக் கூறி, நன்றி சொல்லலாமா என்று நானும், பேராசிரியர் அவர்களும் பேசிக்கொண்டோம். இதை இந்தத் தருணத்தில் சொல்லக் கூடாதுதான்; மரபை மீறுகின்ற செயலாக இதை நான் அறிவேன். இருந்தாலும் இந்தத் தருணத்தைப் பயன்படுத்திக்கொண்டு, கூட்டணியில் இடம்பெற்று எனது வெற்றிக்கு அயராது உழைத்த அனைத்துக் கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும் என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த செய்திகள் அனைத்தையும் நாளை மக்களுக்குக் கொண்டு சேர்க்கின்ற பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தளபதி அவர்களைச் சுற்றியிருக்கிற செயலக அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகள் என ஒவ்வொருவருடைய நியமனத்திலும், தேடிப்பார்த்து முத்துக்களாக நியமித்து தடம் பதித்திருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டின் வரலாற்றில் நிச்சயமாக இந்த ஆட்சி ஒரு பொற்கால ஆட்சியாக மலரும். காரணம், இன்றைக்கு உங்களுடைய ஒவ்வொரு நடவடிக்கையையும் தமிழ்ச் சமூகம் உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. அப்படிப்பட்ட நல்லாட்சி தருகின்ற தளபதி அவர்களின் தலைமையின்கீழ் நானும் இந்த அவையில் இடம் பெறுவதற்கு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் இந்த அவையில் வீற்றிருக்கின்ற அவை முன்னவர் உள்ளிட்ட அனைத்து ஆளுமைகளுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி அவர்கள்.

**திரு. மு. ஜெகன் மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, தோழமைக் கட்சியினுடைய தலைவர்களே மற்றும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களே உங்கள் அனைவருக்கும் புரட்சி பாரதம் கட்சியின் சார்பாக எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பேரவையின், 16–வது சட்டப் பேரவைத் தலைவராக இன்றைக்கு நீங்கள் பொறுப்பேற்றிருக்கிறீர்கள். தங்களுடைய வாழ்க்கையை ஓர் ஆசிரியராகத் தொடங்கி, பிறகு பொது வாழ்வை காங்கிரஸ் கட்சியிலிருந்து தொடங்கி இன்று திராவிடக் கட்சி வரையில் தங்களுடைய பொதுப் பணியைச் சிறப்பான முறையிலே நீங்கள் செய்திருக்கிறீர்கள். அதற்கு உதாரணமாக இங்கே இருக்கின்ற பல்வேறு தலைவர்கள் உங்களுடைய பொது வாழ்க்கையைப்பற்றி மிக அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஓர் ஆசிரியராக எப்படி நீங்கள் அந்தப் பள்ளிக்கூடத்தை வழிநடத்தினீர்களோ அதேபோல இந்த அவையை நீங்கள் ஓர் ஆசிரியராக வழிநடத்தி, அனைவருக்கும் வாய்ப்பை வழங்கி, அனைத்துக் கட்சி உறுப்பினர்களின் நன்மதிப்பைப்பெற்று, பேரவைத் தலைவர்களின் வரிசையில் நீங்களும் ஒரு சிறந்த தலைவராக வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு, இந்த அவைக்கு சிறப்பானதொரு துணைத் தலைவரும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். உண்மையாக அவருக்கும் எங்களுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த கீழ்வைத்திணான்குப்பம் தொகுதி மக்களுக்கும் என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வாழ்த்துகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த இருக்கையில் என்னை அமரவைத்து அழகுபார்க்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 11–15*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு" என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் வரிகளுக்கு இலக்கணமாக விளங்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகம், நடந்து முடிந்த தமிழக சட்டமன்றத் தேர்தலில் பெரும்பான்மைப் பெற்று, ஆட்சி அமைக்க ஆதரவுக் கரம் நீட்டிய தமிழக மக்கள் அனைவருக்கும் தங்கள் மூலமாக எனது மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

[திரு. மு.க. ஸ்டாலின்] [2021 மே 12

"செந்தமிழால் செய்த உடல், செங்கோலால் செய்த விரல், வெண்கலத்தால் செய்த குரல், வெற்றிகளால் செய்த கழல், சங்கநூல் செரித்த குடல், சரித்திரத்து ஞானக் கடல், நெஞ்சமெல்லாம் தமிழ் அன்னை, நினைப்பதெல்லாம் தமிழன்னை" என்று கவிஞர் தணிகைச் செல்வனால் போற்றப்பட்ட முத்தமிழறிஞர் நம் நெஞ்சமெல்லாம் அன்றும், இன்றும், என்றும் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) வாழ்ந்துகொண்டிருக்கக்கூடிய நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களை வணங்கி என்னுடைய உரையை நான் தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் இந்த இருக்கையில் அமர்ந்திருப்பதைப் பார்க்கும்போது என் நெஞ்சம் அடையும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. எந்த அளவுக்கு தாங்கள் உணர்ச்சிமயமாக இப்போது அமர்ந்திருக்கிறீர்களோ அதைவிட அதிகமாக நான் உணர்ச்சியும், பெருமையும், பூரிப்பும் அடைந்துகொண்டிருக்கிறேன். இங்கே எல்லோரும் குறிப்பிட்டுச் சொன்னார்கள்; அனைத்து தொலைக்காட்சி விவாத மேடைகளிலும் கம்பீரமாக உட்கார்ந்து, பல்வேறு விவாதங்களில் பங்கெடுத்து, கருத்தோடும், சுவையோடும் பேசக்கூடிய தங்களது விவாதங்களைத் தொடர்ந்து கவனித்துக் கொண்டிருக்கக்கூடியவன் நான். அந்த வகையில் ஆக்கப்பூர்வமான விவாதத்திற்குப் புகழ்பெற்ற ஜனநாயக மன்றமாக விளங்கிக்கொண்டிருக்கக்கூடிய இந்த சட்டமன்றத்தினுடைய பேரவைத் தலைவராகத் தாங்கள் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது எங்களுக்கெல்லாம் மிகுந்த பெருமையளிப்பதாக இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் ஏற்றிருக்கும் பேரவைத் தலைவர் பொறுப்பு "நாட்டின் சுதந்திரம் மற்றும் விடுதலையின் சின்னம்" என்று இந்தியாவின் முதல் பிரதமரான பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் சொன்னார்கள். "அவைத் தலைவர் பேரவையைக் குறிப்பவர். அவையினுடைய கண்ணியம், சுதந்திரத் தன்மை ஆகியவற்றின் அடையாளம் பேரவைத் தலைவர்" என்று நேரு அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அந்த சுதந்திரத்தின், ஜனநாயகத்தின் அடையாளமாக தாங்கள் வீற்றிருக்கிறீர்கள். கதர் ஆடை அணிந்து நீங்கள் அமர்ந்திருக்கிறீர்கள். தூய்மையின் அடையாளமாக, வெள்ளை உள்ளத்தின் அடையாளமாக இந்த மன்றத்தின் உறுப்பினர்களுக்கெல்லாம் நீங்கள் இன்றைக்கு

*காட்சி தந்துகொண்டிருக்கிறீர்கள். இந்த 16–வது சட்டமன்றத்தில் தாங்கள் பேரவைத் தலைவராக அமர்ந்திருப்பது இந்த மாபெரும் மன்றத்திற்குப் பெருமையளிப்பதாக அமைந்திருக்கின்றது.*

*இந்த மாமன்றத்தில் இருந்த பேரவைத் தலைவர்கள் அனைவரும் இந்த அவைக்குப் பல்வேறு பெருமைகளைச் சேர்த்துத் தந்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தென் மாவட்டத்தைச் சார்ந்தவர்களே அதிகமாக பேரவைத் தலைவர்களாக இருந்திருக்கிறார்கள். தென் மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் மாண்புமிகு திரு. எஸ். செல்லபாண்டியன் அவர்கள், மாண்புமிகு திரு. சி.பா. ஆதித்தனார் அவர்கள், மாண்புமிகு திரு. பி.எச். பாண்டியன் அவர்கள், மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள், மாண்புமிகு திரு. சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள், மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள், மாண்புமிகு திரு. கா. காளிமுத்து அவர்கள், மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன் அவர்கள். தற்போது தாங்கள் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள். இந்தப் பேரவையை ஜனநாயக மாண்புடன் நடத்திடும் திறமை படைத்தவர்களாக பேரவைத் தலைவர்கள் இருந்திருக்கிறார்கள். தாங்களும் இந்தப் பேரவையை ஜனநாயக ரீதியில், அந்த மரபு வழி நின்று நிச்சயம் நடத்துவீர்கள் என்பதில் யாருக்கும் எள்ளளவும் சந்தேகமில்லை.*

*முற்பகல் 11–20*

*இந்திய நாட்டினுடைய விடுதலைக்குப் பிறகு 1952 ஆம் ஆண்டு நடந்த முதல் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற உறுப்பினர்களைக் கொண்ட முதல் சட்டமன்றம் கூடிய இடம்தான், இந்த இடம். மொழி வாரியாக மாகாணங்கள் பிரிப்பதற்கு முன்னதாக 375 உறுப்பினர்கள் சென்னை ராஜதானியில் இருந்ததால், அனைவரும் உட்காரக்கூடிய வசதியுடன் புதிய பேரவைக் கட்டடம் அரசினர் தோட்டத்தில் அப்போது கட்டப்பட்டது. அதில்தான் முதல் ஐந்தாண்டுக்காலம் பேரவை நடந்திருக்கிறது. மொழி வாரியாக மாகாணங்கள் பிரிக்கப்பட்டதற்குப் பிறகு தமிழ்நாடு சட்டமன்றத்திற்கான உறுப்பினர் எண்ணிக்கைக் குறைந்த பிறகு செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் மீண்டும் சபை நடவடிக்கைகள் நடந்தன. அத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க இடத்தில் கூட்டப்பட்டுள்ள இந்தக் கூட்டத்தில் தாங்கள் பேரவைத் தலைவர் இருக்கையில் அமர்ந்திருப்பது உள்ளபடியே பாராட்டுக்குரியது;*

மகிழ்ச்சிக்குரியது; பெருமைக்குரியது. உள்ளத்தால், அறிவாற்றலால், செயல் திறத்தால் வளர்ந்த தங்கள் தலைமையிலான இந்த அவையிலே நாங்கள் செயல்படுவதை ஒரு பொற்காலமாகக் கருதிக்கொண்டிருக்கிறோம்.

நெல்லை மாவட்டம், காவல்கிணறு என்ற ஊருக்கு அருகில் இருக்கக்கூடிய லெப்பை குடிகாடு என்ற ஊரில் பிறந்த தாங்கள் பள்ளி ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கியிருக்கிறீர்கள். காவல்கிணறு திருஇருதய மேல்நிலைப் பள்ளியில் கணிதம் மற்றும் ஆங்கில ஆசிரியராக இருந்து, அரசியல் ஈடுபாட்டின் காரணமாக ஆசிரியர் வேலையை விட்டு விலகி, அரசியல் பணிக்கு வந்திருக்கிறீர்கள். மாணவர்களுக்கு ஆசிரியராக இருந்த தாங்கள், இப்போது 234 சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட இந்தப் பேரவைக்குத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மூன்று முறை சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றி, நான்காவது முறை வெற்றி பெற்றுள்ள தங்களுக்குச் சூட்டப்பட்டிருக்கிறது இந்த மகுடம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் உங்கள் உத்தரவுகளுக்கு, கட்டளைகளுக்கு, கண்ணசைவுக்குக் கட்டுப்பட்டு நிச்சயமாகச் செயல்படுவோம். 'சட்டசபையை அதிகார அமைப்பாக இல்லாமல், சமூகத்துக்கு நன்மை செய்யும் அமைப்பாகக் கருத வேண்டும்'. இதை யார் சொன்னது? தந்தை பெரியார் அவர்கள். எனவே, அவர் வழிவந்திருக்கக்கூடியவர்கள் நாங்கள்! இங்கேகூட எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். 'ஜனநாயக நாட்டில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்பவை ஒரு நாணயத்தினுடைய இரு பக்கங்கள். இதில் ஒரு பக்கம் சரியாக இருந்து, மறுபக்கம் சிதைந்து போயிருக்குமென்று சொன்னால், அந்த நாணயம் செல்லாக் காசாகி விடும்'. இதே பேரவையில்தான் அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அவருடைய தம்பிமார்கள்தான் நாங்கள்.

'ஒரு மனிதனின் முகத்தில் உள்ள நிறைகளை மட்டுமல்ல, குறைகளையும் காட்டுவதுதான் கண்ணாடி. அதுபோல் ஆளுங்கட்சியினுடைய நிறை குறைகளைக் காட்டுவதுதான் சட்டமன்றம்' என்று சொன்னவர் யார் தெரியுமா? எங்கள் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கருத்துகளைக் கருத்துகளால் எதிர்கொள்ளும் வல்லமை எங்களுக்கு உண்டு. ஆனால், அதில் கர்வமோ, ஆணவமோ இருக்காது.

*ஜனநாயகமும், மரபுகளும் நிச்சயமாக அதிலே இருக்கும். எந்தக் காரணத்தைக் கொண்டும் ஆணவம் இருக்காது; கர்வம் இருக்காது. ஜனநாயகம்தான் இருக்கும். மரபுகளும் கடைப்பிடிக்கப்படும் என்பதை உறுதியோடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.*

*தோல்வியில் துவள்வதும், வெற்றியில் இறுமாப்பு கொள்வதும் எங்களுடைய வழக்கமல்ல. அப்படி எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் எங்களை வளர்க்கவும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, தமிழக மக்கள் அளித்திருக்கக்கூடிய இந்த மாபெரும் வெற்றி, எங்களை மேலும் மேலும் அடக்கமுள்ளவர்களாக ஆக்கி இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கட்டுப்பாடோடு இருப்பதோ, அடக்கத்தோடு இருப்பதோ சட்டமன்றத்தினுடைய ஜனநாயகத்தைக் காப்பாற்றிடவே. அதை எந்தவிதத்திலும் பலவீனமாக யாரும் கருதிடக் கூடாது. இவை அனைத்தையும் அறிந்த தாங்கள் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று பேதம் பார்க்காமல், அனைவருக்கும் பொதுவானவராக இருந்து, பழம்பெருமை வாய்ந்த, மிகத் தொன்மையான இந்த அவையை அதற்குரிய மாண்புடன் நடத்திடுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு மட்டுமல்ல, இங்கிருக்கக்கூடிய எல்லோருக்கும் இருக்கிறது. ஆகவே, இங்கிருக்கக்கூடிய அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அந்த நம்பிக்கை நிச்சயமாக இருக்கும். அதில், எந்த மாறுபாடும் இருக்க வாய்ப்பே கிடையாது. அதன் சாட்சிதான் மாண்புமிகு அவை முன்னவரும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரும் தங்களை இந்தப் பெருமைமிகு இருக்கையில் அழைத்து வந்து அமர வைத்தது.*

*லார்டு வெலிங்டன் அவர்களும், அவரது துணைவியாரும் இணைந்து, இப்பேரவைக்குப் பரிசாக வழங்கிய அந்த அழகிய நாற்காலியில் நீங்கள் அமர்ந்திருக்கிறீர்கள். அவையினுடைய மாண்பு கெடாது, எவ்வித விரோத உணர்ச்சிக்கும் இடம் தராமல், ஜனநாயக மரபுகளைக் காக்கக்கூடிய வகையில் ஆளுங்கட்சி செயல்படும் என்ற உறுதியை நான் உங்கள்மூலமாக இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.*

*முற்பகல் 11–25*

*அதேபோல், பேரவைத் துணைத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி அவர்களையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன்.*

திருவண்ணாமலை நகர்மன்ற உறுப்பினராக 1986 ஆம் ஆண்டு மக்கள் பணியாற்றியவர்; ஆறு முறை சட்டமன்ற உறுப்பினராக மக்களால் தேர்வு செய்யப்பட்ட பெருமைக்குரியவர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள். கடந்த சட்டமன்றப் பேரவையில் பிரதான எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் துணைக் கொறடாவாக அவர் சிறப்பாகப் பணியாற்றியிருக்கிறார். அனைத்து விவாதங்களிலும் முழுமையாகப் பங்கெடுத்த பெருமை அவருக்குண்டு. மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் சொல்லக்கூடிய கருத்துகளையெல்லாம் ஆழமாக உள்வாங்கக்கூடியவர். அவை முன்னவர் அவர்கள்கூட இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். பேரவை அலுவல் நேரம் நிறைவு பெறுகிற வரையிலே, ஏன் சில நேரம் மதிய உணவைக்கூட மறந்து இந்தப் பேரவையிலே அமர்ந்து பேரவை நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருந்தவர் நம்முடைய திரு. பிச்சாண்டி அவர்கள். அனைவருடனும் அன்போடு பழகக்கூடியவர்; பாசத்தோடு பழகக்கூடியவர் மாண்புமிகு திரு. பிச்சாண்டி அவர்கள். எனவே, பேரவைத் துணைத் தலைவராக அவரை நாம் தேர்ந்தெடுத்திருக்கிறோம். அவரையும் மனமார நான் பாராட்டுகிறேன்; வாழ்த்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவைத் தலைவருக்கு இந்த அவையின் மாண்பைக் காப்பாற்ற நிச்சயமாக துணைத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய திரு. பிச்சாண்டி அவர்கள் துணையாக இருப்பார், இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நேரத்தில் தனிப்பட்ட எனக்குள்ள வருத்தம், அவைத் தலைவர் ஆனதன் மூலமாகத் தங்களது அரசியல் பணிகளை நாங்கள் பயன்படுத்திக்கொள்ள முடியாத சூழல் இப்போது எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆனால், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள்; இதே அவையில் திரு. கே.ஏ. மதியழகன் அவர்களை பேரவைத் தலைவர் பொறுப்பில் அமர வைத்து, “எங்கள் உடன்பிறப்பாக இருந்து எங்களோடு இந்த மாபெரும் இயக்கத்தை வளர்க்கக் காரணகர்த்தாவாக இருந்த தாங்கள், இன்று அந்தப் பணியிலிருந்து அறுத்துக் கொண்டீர்கள் என்று சொல்ல மாட்டேன்–ஒதுங்கியிருக்கிறீர்கள்” என்று வாழ்த்தியதைத்தான் உங்களுக்கு நான் நினைவுபடுத்துகிறேன். ஆகவே, கழகப் பணி

செய்ய முடியாமல் போகிறதே என்ற வருத்தம் எனது உள்ளத்தில் ஓர் ஓரத்தில் இருந்தாலும், இந்த இடத்துக்குப் பொருத்தமானவர் தாங்கள்தான் என்பதை எண்ணி, அந்தவகையிலே நான் மனநிறைவு அடைகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தங்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், எதிர்க்கட்சியினர் உட்பட அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது பாராட்டுதல்களை, வாழ்த்துகளை நன்றியோடு தெரிவித்துக்கொண்டு, வாருங்கள் நாம் அனைவரும் சேர்ந்து, நமக்கும் நாட்டு மக்களுக்குமான நல்லதோர் எதிர்காலத்தை அமைக்க இந்தச் சட்டமன்ற ஜனநாயகத்தைப் பேணிப் பாதுகாப்போம் என்று கூறி, என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி. அடுத்து, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, அரசு தலைமைக் கொறடா அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களே, ஊடகத் துறை நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் துணைத் தலைவர் பொறுப்பிற்கு என் பெயரை முன்மொழிந்த தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் தளபதியார் அவர்களுக்கும், வழிமொழிந்த மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அண்ணன் அவர்களுக்கும், ஒருமனதாக என்னைத் தேர்ந்தெடுத்த பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மே 7 ஆம் நாள், தமிழக அரசியல் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நாள். கொரோனா பெருந்தொற்று பரவி வரும் நிலையில் தன் பதவியேற்பு நிகழ்ச்சியால் ஒருவர்கூட பாதிக்கப்படக்கூடாது

என எளிமையான முறையில் பதவியேற்பு; முதலமைச்சராகத் தலைவர் பொறுப்பேற்றவுடனேயே ஐந்து முத்தான திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான கோப்புகளில் கையெழுத்திட்டார்கள்.

கொரோனா அச்சுறுத்தலால் மக்கள்படும் துன்பங்களைப் போக்க அரிசி குடும்ப அட்டை வைத்துள்ள குடும்பங்களுக்கு ரூ.4,000/– வழங்கும் திட்டத்திற்கு ஒப்புதலளித்து *(மேசையைத் தட்டும் ஒலி)* உடனடியாக முதல் தவணையாக ரூ.2,000/– வழங்க ஆணையிட்டிருக்கிறார்கள்.

ஆவின் பால் விலையை லிட்டருக்கு 3 ரூபாய் வீதம் குறைத்திருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* நகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் மகளிர், உயர் கல்வி பயிலும் மாணவியர் உள்ளிட்ட அனைத்து மகளிரும் கட்டணம் இல்லாமல் பயணம் செய்யும் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அறிவித்தவாறே, ஆட்சிக்கு வந்த 100 நாட்களுக்குள் தன்னிடம் தரப்பட்ட கோரிக்கை மனுக்கள்மீது நடவடிக்கை எடுத்து, தீர்வு காணும்வகையில் 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' என்னும் திட்டத்தைச் செயல்படுத்த புதிய துறையை ஏற்படுத்தி, அதற்கான அதிகாரியை நியமித்திருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* கொரோனா சிகிச்சை செலவுகளை தனியார் மருத்துவமனைகளுக்கு அரசு திருப்பி வழங்குவது என அறிவித்திருக்கிறார்கள். இந்த ஐந்து முத்தான திட்டங்களுக்குரிய கோப்புகளில் கையெழுத்திட்டு, அதன் மை ஈரம் காய்வதற்குள் அரசாணைகள் வெளியீடு என வேகத்தோடு விவேகமாகச் செயல்படும் தன்மை கொண்டவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

*முற்பகல் 11–30*

புகழுரை, பொய்யுரை கூடாது. ஒளிவு மறைவின்றி உண்மையை உரைக்க வேண்டுமென்று அரசு அலுவலர்களுக்கு அறிவுரை; ஒவ்வொரு பிரச்சினையின் ஆழத்தைக் காணும் ஞானம், கொரோனா பெருந்தொற்றால் பாதிக்கப்படும் மக்களுக்குத் தேவைப்படும் ஆக்சிஜன் அளவை அதிகரிக்க மத்திய அரசிடம் கேட்டுப் பெற்ற உரிமை; பதவியேற்ற நிமிடம் முதல் ஓயாத உழைப்பு, இத்தகைய பண்புகளைப் பெற்ற தளபதியார், மாண்புமிகு முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள இந்த அவையில் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வுகள் நடைபெறக்கூடிய

இந்நாளில், பேரவைத் துணைத் தலைவராகப் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றமைக்கு உள்ளபடியே நான் பெருமிதம் அடைகிறேன். இந்த அவையின் ஓர் அங்கமாக நான் திகழ்வதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்தப் பேரவையில் மிகுந்த அனுபவம் உள்ள உறுப்பினர்கள் பலர் இருக்கிறீர்கள். முதல்முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துள்ள உறுப்பினர்களும் உள்ளார்கள். எனவே, பேரவையின் மரபுகளை நன்கறிந்த அனுபவம்மிக்க உறுப்பினர்கள், இளையவர்களுக்கு நிச்சயமாக வழிகாட்டிகளாக இருப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் “மக்கள்தான் எஜமானர்கள்” என்று என்னிடம் சொல்வார். மக்களின் பிரச்சினைகளைப் பேரவையில் எடுத்துவைப்பதோடு, ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளும் வழங்கப்படும்போதுதான் ஜனநாயகம் வலுப்பெறும் என்பார்கள். குற்றம் கூறுவதாக அமையாமல் அரசின் செயல்பாடுகளில் தவறு இருக்குமேயானால், அதைச் சுட்டிக்காட்டி சரிசெய்வதுதான் பேரவையின் பணியாக இருக்க வேண்டும் என்பார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்தப் பேரவையில் செயல்பட்டு வந்த விதத்தையும், தளபதியார் பல்வேறு பொறுப்புகளில் இந்தப் பேரவையில் பணியாற்றிய விதத்தையும் கண்டு வியந்தவன் நான். ஜனநாயகத்திற்கு வலு சேர்க்கின்ற வகையிலே விவாதம் அமைய வேண்டும் என்பதிலே மிகுந்த ஈடுபாடு கொண்டவர்கள். எனவே, அதற்கேற்ப இந்தப் பேரவையின் விவாதங்கள் அமைய என்னால் இயன்ற அனைத்து முயற்சிகளையும் செய்வேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். சட்டமன்றத்தின் பணிகள் மிகச் சிறப்பாக அமைகின்ற வகையில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நான் உறுதுணையாக இருப்பேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்திலே இருபெரும் தலைவர்கள் மறைந்துவிட்டார்கள், இங்கே வெற்றிடம் ஏற்பட்டிருக்கிறது என்று பல ஊடகங்கள் தெரிவித்தன. அந்த வெற்றிடம் இன்றைக்கு மக்களால் நிரப்பப்பட்டிருக்கிறது; தளபதிதான் என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மக்களின் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கிறார் என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் மற்றும்

என்னை வாழ்த்திப் பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் மற்றும் அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்றத்திலும் சரி, ஊடக விவாதங்களிலும் சரி, எப்பொழுதும் எந்தப் பேப்பரையும் கையில் வைத்துக்கொண்டு படித்து, பேசுகின்ற பழக்கத்தை நான் ஒருபோதும் வைத்ததில்லை. ஆனால் முதல்முறையாக சட்டப் பேரவைத் தலைவரானதும், சட்டமன்றச் செயலாளரிடம் எனக்கு பேசுகின்ற குறிப்புகள் கொடுத்தால் போதும் என்றேன். இல்லை, நீங்கள் எல்லோருக்கும் பொதுவானவர்கள், ஆகவே, நாங்கள் எழுதித் தருகிறோம், அதிலே வேண்டுமானால் கருத்துகளைத் தாருங்கள் நாங்கள் மாற்றிக்கொள்கிறோம் என்று சொல்லி, அந்த அடிப்படையில் இதைத் தந்திருக்கின்றார்கள். உண்மையிலேயே மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னது போன்று, பேசுகின்ற ஆற்றல் சற்று தடைபட்டாலும், இவ்வளவு பெரிய மன்றத்தில் உங்களையெல்லாம் பார்த்து, இந்த ஐந்து ஆண்டுக்காலம் உங்களோடு பணியாற்றுகின்ற வாய்ப்பைப் பெற்றதை நான் பெருமையாகக் கருதி *நேற்றிரவு நான் dictate செய்து, அவர் தயாரித்துக் கொடுத்த உரையை உங்கள் மத்தியில் பகிர்ந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, அரசு தலைமைக் கொறடா அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, 16-வது சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பல்வேறு அரசியல் கட்சிகளின் மாண்புமிகு உறுப்பினர்களே, அரசு நிருவாகத்தின் அச்சாணியாக விளங்குகின்ற அரசு அலுவலர்களே, ஜனநாயக அமைப்பின் நான்காவது தூணாக விளங்குகின்ற ஊடக, பத்திரிகை நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பேரவைத் தலைவர் பொறுப்புக்கு என் பெயரை முன்மொழிந்த எங்களுடைய தலைவர், திராவிட இயக்கத்தின் வழித்தோன்றல்,

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

தலைவர் கலைஞருடைய மறுஉருவமாக, நாணயத்தின் ஒரு பக்கமாக அண்ணாவாகவும், மறுபக்கமாக கலைஞராகவும் எங்களுக்கு முதலமைச்சராகவும் இருந்து என் பெயரை முன்மொழிந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும ஒலி) வழிமொழிந்த, என்னிடம் அன்பாகக் கருத்துகளைப் பரிமாறி, எல்லோரும் செயல்பட வேண்டுமென்று எப்பொழுதும் எனக்கு கருத்துகளைச் சொல்லுகின்ற மாண்புமிகு நீர் வளத் துறை அமைச்சர் மற்றும் அவை முன்னவர் அண்ணன் அவர்களுக்கும், ஒருமனதாக என்னைத் தேர்ந்தெடுத்த இந்தப் பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும் முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–35

மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியதுபோன்று, நெல்லை சீமையிலே, மேற்குத் தொடர்ச்சி மலை அருகே, காவல்கிணறு ஊராட்சியில், லெப்பை குடிகாடு என்ற ஒரு சிறு கிராமத்தில் ஒரு ஏழை விவசாயியின் மகனாகப் பிறந்து, வளர்ந்து, 15 ஆண்டுக் காலம் ஆசிரியராகப் பணியாற்றிய என்னை இந்த நிலைக்குக் கொண்டு வந்த ராதாபுரம் சட்டமன்றத் தொகுதி மக்களுக்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அவர்கள், ஏற்கெனவே 3 முறை சட்டமன்றத்திற்கு அனுப்பினார்கள். கடந்த முறை, சட்டமன்றத் தேர்தலிலே நான் வெற்றி பெற்றேன் என்ற உறுதியைப் பெற வேண்டும் என்பதற்காக நீதிமன்றம் சென்றேன். உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்த காரணத்தினால் அந்த உறுதியைப் பெற முடியவில்லை. தற்போது, அதே தொகுதியில் 5–வது முறையாக என்னைப் போட்டியிட வைத்து, வெற்றி பெற வைத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், என்னுடைய தொகுதி மக்களுக்கும் இந்த நல்ல நேரத்தில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எனக்காக உழைத்த திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள், தோழர்கள், பொறுப்பெடுத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், அவர்களோடு இணைந்து பணியாற்றிய தோழமைக் கட்சி நண்பர்கள் உட்பட அனைவருக்கும் இந்த நல்ல வேளையிலே என்னுடைய அன்பான வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன். என்மீது பெரும் நம்பிக்கை வைத்து, ராதாபுரம் தொகுதியில் 5–வது முறையாக போட்டியிடுவதற்கு வாய்ப்பைத் தந்து, என்னை வெற்றி பெறச் செய்ததோடு மட்டுமல்லாமல், சரித்திர

புகழ் வாய்ந்த இந்தச் சட்டமன்றத்தின் பேரவைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கச் செய்து, இம்மாபெரும் சிறப்பை சாமானியனான, 15 ஆண்டுக் காலம் பள்ளி ஆசிரியராக பணிபுரிந்த, எனக்குத் தந்து, மகிழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எனது நெஞ்சம் நிறைந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தகுதி, திறமை, ஆற்றல் நிறைந்த பலர் கூடியுள்ள இச்சபைக்குத் தலைவராகப் பொறுப்பு வகிக்கும் வாய்ப்பளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை நன்றியை நான் காணிக்கையாக்க விரும்புகின்றேன். அவர் காட்டிய பாசத்திற்கும், நேசத்திற்கும் பலனாக அவர் எதிர்பார்ப்பது, ஜனநாயக முறையில் இந்தப் பேரவையை வழி நடத்த வேண்டும் என்பதுதான்; அதுதான் அவருடைய ஆசை. உங்கள் எல்லோருக்கும் நன்றாகப் புரிந்திருக்கும். என்னை வாழ்த்த வேண்டும்; அந்த வாழ்த்துதலோடு சேர்த்து நான் எவ்வாறு நடந்து கொள்வேன், இந்த ஆட்சி எவ்வாறு நடைபெறும், இந்த மன்றம் எவ்வாறு செயல்பட வேண்டும் என்று கூறி, அனைவரையும் ஒருங்கிணைத்து வழிநடத்த வேண்டும் என்று ஆலோசனை சொல்லியிருப்பதை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள்.

அதேபோன்று, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விரும்புவதைப் போன்று எல்லோரையும் அரவணைத்து, இந்தியாவிலேயே ஓர் எடுத்துக்காட்டான சட்டமன்றமாக இந்தச் சட்டமன்றம் நிச்சயமாகச் செயல்படும்; நாம் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து அதற்கான முயற்சியைச் செய்து கொண்டு வருவோம் என்பதுதான் என்னுடைய ஆசை.

அந்த அடிப்படையில்தான்,

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து
அதனை அவன்கண் விடல்."

என்ற வள்ளுவனைப் போற்றிய கலைஞரின் வழித்தோன்றல் தளபதியார் அவர்கள், என்மீது கொண்ட நம்பிக்கைக்காக என்றும் நிச்சயமாக உழைப்பேன் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கின்றேன். என்மீது எவ்வளவு நம்பிக்கை; இப்பணியை இவரால் செய்ய முடியும் என்ற பெரும் நம்பிக்கை. தலைவரின் நம்பிக்கையைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில், என்னை நான் இன்னும் தகுதியுடையவனாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்கின்ற பெரும் பொறுப்பு எனக்கு உருவாகியுள்ளது என்பதை நான் முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*2007 ஆம் ஆண்டு என்று எண்ணுகின்றேன். பத்திரிகையாளர் சோலை அவர்கள், தமிழக துணை முதல்வராகப் பொறுப்பேற்ற, இன்றைய முதல்வர் அவர்களைப் பிரமிக்க வைக்கிற அளவில், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பத்திரிகையாளர், ஊடகவியலாளர் நண்பர்களை அழைத்து, ஒரு கருத்தரங்கை நடத்தினார். அந்தக் கருத்தரங்கில், சோலை அவர்கள் குறிப்பிட்டுச் சொன்ன ஒரு கருத்தை நான் சொல்ல விரும்புகின்றேன். இதை அரசியலுக்காக அல்ல; நடந்த சம்பவத்தை, பத்திரிகையாளர் என்ற முறையில் அவர் கூறிய கருத்தைச் சொல்கின்றேன். அப்போது, "துணை முதல்வராகப் பொறுப்பேற்ற திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், எந்த வகையிலும் தொட்டியில் வைத்து வளர்த்த செடி அல்ல; இவர் 50 ஆண்டுக் காலம் தானாக வளர்ந்த ஒரு மரம். (மேசையைத் தட்டும் ஒலி) முதல்வருடைய மகன் என்பதற்காக இந்தப் பொறுப்பை வழங்கவில்லை. ஒரு பகுதிச் செயலாளராக இருந்து இந்த அளவிற்கு உயர்ந்து வந்திருக்கின்றார்". இதிலிருந்து நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், அத்தனை பத்திரிகையாளர்கள் மத்தியில், ஊடகங்கள் மத்தியில் கிட்டத்தட்ட 500-க்கும் மேற்பட்டவர்கள் இருந்த சபையிலே, '50 ஆண்டுக் காலத்தில் தமிழ்நாட்டுக்குக் கிடைத்த ஒரு தன்னிகரற்ற தலைவர் திரு. மு.க. ஸ்டாலின்' என்று நம்முடைய மூத்த பத்திரிகையாளர் சோலை சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) அதனை நிரூபிக்கின்றவண்ணமாக இங்கு இந்த அவையை அலங்கரித்துக் கொண்டிருப்பதை எண்ணிப்பார்த்து நான் பெருமைப்படுகிறேன்.*

*முற்பகல் 11-40*

*2016-2017 ஆம் ஆண்டுகளிலே தமிழ்நாட்டிலே பல அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டபோதுகூட, நினைத்திருந்தால் இந்த இடத்தில் அவர் அமர்ந்திருக்கலாம். ஆனால், தெளிவாக ஒன்றைச் சொன்னார், 'இந்த மு.க. ஸ்டாலின் புறவாசல் வழியாக வரமாட்டேன், (மேசையைத் தட்டும் ஒலி) மக்களைச் சந்தித்து, மக்களுடைய அனுமதியைப் பெற்றுத்தான் இந்த இடத்தில் அமருவேன்' என்று சொன்னார். அந்தவகையில் இங்கு அமர்ந்திருக்கிறார் என்பதை எண்ணிப் பார்க்கிறபோது உண்மையிலேயே மட்டற்ற மகிழ்ச்சியாக எனக்கு இருக்கின்றது.*

*இந்த நேரத்திலே மாண்புமிகு முதல்வராக, தலைவர் அரியணையில் உள்ள இந்நாளில் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இந்நாள் என் வாழ்வில் மறக்க முடியாத*

ஒரு பொன்னாள். அதைவிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னைப் பாராட்டிப் பேசினார்களே! வாழ்த்திப் பேசினார்களே! அது என் வாழ்க்கையில் எனக்குக் கிடைத்த பெரும் வரம். உண்மையாகத் தொண்டாற்றுபவன் உள்ளம், தலைவனின் பாராட்டு மழைக்குத்தான் கெஞ்சும். அந்தப் பாராட்டை உண்மையிலேயே என்னுடைய வாழ்நாளில் நான் பெறமுடியாத ஒன்றை நான் இந்த அவையிலே பெற்றேன், என் தலைவர் மாண்புமிகு முதல்வர்மூலம் பெற்றேன் என்பது எனக்குப் பெருமையாக இருக்கின்றது.

இந்த நேரத்திலே நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். எங்கள் முதல்வர் அவர்கள். தென் மாவட்டங்களிலிருந்து பல சபாநாயகர்கள் இந்தச் சபையை அலங்கரித்திருக்கின்றார்கள் என்று எல்லோரையும் சொன்னார்கள். எங்களுடைய நெல்லை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் அடையாளம் காட்டப்பட்டவர், அன்றைய சபாநாயகராக இருந்த, நாங்களெல்லாம் பெரிதும் மதிக்கின்ற ஐயா திரு. செல்லபாண்டியன் அவர்கள். அதேபோன்று அண்ணா அவர்களால் அடையாளம் காட்டப்பட்டவர், நம்முடைய பத்திரிகைத் துறையின் ஜாம்பவானான ஐயா திரு. சி.பா. ஆதித்தனார் அவர்கள் இந்த சபையிலே சபாநாயகராக நெல்லை மாவட்டத்திலிருந்து வந்தார். அதேபோன்றுதான் திரு. எம்.ஜி.ஆர். அவர்களால் அடையாளம் காட்டப்பட்ட, அன்பிற்குரிய அண்ணாச்சி திரு. பி.எச். பாண்டியன் அவர்கள் இந்த அவையிலே அமர்ந்திருந்து, வானளாவிய அதிகாரம் எல்லாம் உள்ளது என்பதைச் சொன்னவர், நெல்லை மாவட்டத்திலிருந்து வந்தவர். இன்றளவும் வானளாவிய அதிகாரம் என்றால் அவருடைய பெயர்தான் நினைவுக்கு வரும். அதேபோன்று நெல்லை மாவட்டத்திலே ஐயா செல்லபாண்டியன் அவர்களுடைய வழக்கறிஞராக, அவருக்குத் துணையாக, அவருடைய ஜூனியராக பணியாற்றியவர், பண்பாளர், நான் பெரிதும் நேசிக்கின்ற அண்ணாச்சி திரு. ஆவுடையப்பன் அவர்களைத் தலைவர் கலைஞர் அவர்கள் அடையாளம் காட்டினார். அந்தவகையில், அதே நெல்லை மாவட்டத்திலிருந்து ஓர் எளிய, ஒரு சாமானிய, ஒரு பள்ளி ஆசிரியரை, 'நீதான் இந்த அவையினுடைய முதல்வர்' என்று என்னைச் சுட்டிக்காட்டி, இங்கே அமர்ந்திருக்கின்ற, முதன்முதலாக இந்த அவையிலே முதல்வராகப் பொறுப்பேற்று, என்னையும் அவரோடு இந்த அவைக்கு அழைத்து

*வந்த நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*நான் மிகப் பெரிய சட்டம் படித்தவன் அல்ல. ஆனால், தலைவர் கலைஞர் அவர்களும், தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களும் எனக்குச் சொல்லித் தந்திருக்கின்றார்கள். நான் சட்டத்தை மதிக்கின்றவன், திராவிட முன்னேற்றக் கழகம் சட்டத்தை மதித்து நடக்க வேண்டும். அதுபோல், நீங்கள் சட்டம் படிக்கவில்லையென்றாலும், சட்டத்தை மதித்து நடந்துகொள்ளுங்கள் என்று அறிவுரை சொல்லியிருக்கின்றார். நிச்சயமாக சட்டத்தை மதிப்பேன். சபாநாயகராக, நாகரிகமானவனாக உங்களோடு இணைந்து நானும் பணியாற்றுகின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கின்றேன். நிச்சயமாக, அவ்வாறு நாகரிகமாக நடந்துகொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய எண்ணம்; என்னுடைய ஆசை. அந்த வகையில் நான் நடந்துகொள்வேன் என்பதை மீண்டும் ஒருமுறை நான் உறுதியாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

*இந்தச் சட்டமன்றத்திற்கென்று பல மரபுகள் உண்டு; பல மாண்புகள் உண்டு. அவற்றில் பலவற்றை இழந்திருக்கின்றோம், பல காணாமல் போய்விட்டன. அதைத்தான் தலைவர் முதல்வர் அவர்கள், "இழந்ததைப் பெற வேண்டும்; இந்த மாமன்றம் இந்தியாவிற்கே ஒரு வழிகாட்டியாக இருந்தது, இன்னும் இருக்க வேண்டும். உங்கள் காலத்தில் இந்த அவை நிச்சயமாக அவ்வாறு விளங்குவதற்கு எல்லோரும் ஒத்துழைப்புத் தாருங்கள்" என்று உங்களிடம் ஒரு விண்ணப்பத்தை வைத்திருக்கின்றார். கட்சிமாச்சரியங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டு எல்லோரிடமும், எங்களுடைய கட்சித் தொண்டர்களுக்குக்கூட ஓர் அறிவுரை வழங்கியிருக்கின்றார். எல்லோரையும் இணைத்து, இணைந்து, எல்லோரிடமும் அன்பாக நடந்துகொண்டு செயல்படுங்கள் என்று சொல்லியிருக்கின்றார். இதிலிருந்தே தெரிந்துகொள்ளலாம், சட்டமன்றத்தில் உங்களுக்குப் பேச வாய்ப்பு கிடைக்குமோ, கிடைக்காதோ என்றுகூட எண்ணலாம்.*

*முற்பகல் 11–45*

*இன்றுகூட சகோதரி விஜயதரணி உட்பட பலபேர் பேசுவதற்கு ஆசைப்பட்டாலும்கூட, அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை என்றாலும், உங்களுடைய வாழ்த்தை நான் ஏற்றுக்கொள்வதாகவே நினைத்துக்கொள்கின்றேன்.*

காரணம், ஒரு கட்சிக்கு ஒருவர் என்று சொன்னால், அதிலிருந்து முதல் நாளே அந்தத் தவறை ஆரம்பித்துவிட்டால் தொடர்ந்து முதல் கோணல் முற்றும் கோணலாகிவிடக் கூடாது என்பதற்காக சட்டமன்றத்திற்கு உள்ள ஒரு மரபு, மாண்பு, இனி, இப்படித்தான் நடந்துகொள்ள வேண்டும் என்பதை நாம் எல்லோரும் இணைந்து எடுத்துக்கொள்கின்ற ஒரு பொது முடிவாக எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர, அதை தனிப்பட்ட ஒருவருக்காக இந்த முடிவு அல்ல என்பதையும், சகோதரி விஜயதரணி அவர்கள் கையை உயர்த்தினீர்கள். தலைவருடைய கண் பார்வையில்கூடபட்டது. இருந்தாலும்கூட நான்தான், இது தேவையா, நானே வாழ்த்தைப் பெற்றுக்கொள்கிறேன், எனக்கு வேண்டியதை என்று சொல்லிவிட்டேன். அந்தவகையில், இதுபோல்தான் இந்த சட்டமன்றம் நடக்கும், நடக்க வேண்டும் என்பதற்கு நீங்களெல்லாம் துணையாக இருக்க வேண்டும் என்று உங்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

இந்தச் சட்டமன்றத்திற்கு என்று பல மரபுகள், பல மாண்புகள் இருப்பதை நாம் அறிவோம். அந்த மாண்புபடி நாம் அனைவரும் நடக்க வேண்டுமென்று நான் உங்களை கேட்டுக்கொள்ளவில்லை; நான் முன் உதாரணமாக நடந்துகொள்கிறேன். உங்களுக்கு நிச்சயமாக அதிலே எந்த சந்தேகமும் வேண்டாம். முதல்வரும் சரி, முன்னாள் முதல்வர், முன்னாள் துணை முதல்வர் எல்லோரும் நீங்கள் நன்றாகத் தெரிந்துகொள்ளுங்கள். நடந்தது நடந்ததாக இருந்தாலும், நடப்பது இந்த மாமன்றத்திற்கு மாண்பு, பெருமை சேர்க்கின்ற அளவில் இந்த அப்பாவு செயல்படுவேன் என்பதை இந்த நேரத்தில் நான் அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அவையில் இடம் பெற்றுள்ள மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இரண்டே இரண்டு குறைதான். நமக்கு பேசுவதற்கு, உரையாற்றுவதற்கு நேரம் காணாது என்பதும், மற்றொன்று பேசுவதற்கு வாய்ப்பு கிடைக்கவில்லையே என்பதும்தான். இந்த சபை, அவசியமற்ற அரசியல் பேசுகின்ற சபை அல்ல; மக்களுடைய பிரச்சினைகளை இந்த அவைக்குக் கொண்டு வர வேண்டும். இந்த அவையிலே மாண்புமிகு முதல்வர், மாண்புமிகு அமைச்சர்கள் அதற்கு பரிகாரம்; விளக்கம் மட்டுமல்ல, நிச்சயமாக என்ன தேவையோ அதை செய்து தர தயாராகயிருக்கின்றார்கள். அந்தவகையில், இந்த அவை நடக்கும். எல்லோருக்கும் பேசுகின்ற

வாய்ப்பும் கிடைக்கும். காரணம், தேர்தல் அறிக்கையிலே தலைவர் சொல்லியிருக்கின்றார். 100 நாட்கள், ஆண்டிற்கு இந்த அவை நிச்சயமாக நடைபெறும். நடப்பதற்கு நாங்கள் முயற்சி செய்வோம் என்ற ஓர் உறுதியைத் தந்திருக்கின்றார். ஆகவே, எல்லோருக்கும், அனைத்து கட்சியினருக்கும் பேசுகின்ற அந்த வாய்ப்பு நிச்சயமாகக் கிடைக்கும்.

நம்முடைய தம்பி திரு. வேல்முருகன் அவர்கள் சொன்னதுபோன்று சின்ன கட்சி, பெரிய கட்சி என்று இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள், நான்கு பேர்தான் இருக்கிறோம் என்று ஒதுக்கிவிடாதீர்கள் என்று சொன்னார். நிச்சயமாக ஒதுக்குகின்ற தலைவர் இல்லை; அவர் தலைமையில் இருக்கின்ற இந்த ஆட்சி, யாரையும் ஒதுக்காது. 234 சட்டமன்ற உறுப்பினர்களையும் ஒன்றுபோல்தான் பார்க்கும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆளும் கட்சி ஒரு கண் என்றால், இன்னொரு கண் எதிர்க்கட்சி என்று உங்கள்மீதுதான் தலைவருடைய கண்ணும், பார்வையும் இருக்கும். அதைத்தான் இந்த அப்பாவுவையும் செய்யச் சொல்லியிருக்கின்றார் என்பதை நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த நேரத்தில் இன்னொன்றையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எனக்கு வானளாவிய அதிகாரம் எல்லாம் கிடையாது. என்னுடைய அதிகாரம் உங்களுக்குக் கட்டுப்பட்டது; உங்களுக்குக் கட்டுப்பட்டது; என்னுடைய அதிகாரம் உங்களுக்குக் கட்டுப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர்கள், பேரவைதான் அதிகாரம் படைத்தது என்பதை நான் அறிவேன். இந்த பேரவைக்குத்தான் அதிகாரமே தவிர, இந்த அப்பாவுக்கு அல்ல; தனி மனிதனுக்கு அல்ல. அதேபோன்று, இந்த இருக்கையை விட்டு கீழே இறங்கினால், நானும் மிக மிக சாமானியனான உங்களில் ஒருவன்தான் என்பதை நான் அறிவேன். பேரவை, தனது அதிகாரத்தை இந்த இருக்கையில் அமர்பவருக்கு அளிக்கிறதே அல்லாமல், தனிப்பட்ட இந்த அப்பாவுக்கு அல்ல. இதுதான் எங்களுடைய தலைவர், எனக்கு அளித்திருக்கக்கூடிய, எனக்கு சொல்லியிருக்கக்கூடிய அறிவுரை. காரணம், தலைவர் கலைஞர் அவர்கள் எப்போதும், நம்முடைய முதல்வர் அவர்களிடம், 'இந்த பதவி, உனக்கு பதவி அல்ல; இது பொறுப்புதான், என்று பல முறை சொல்லியிருக்கின்றார். அதேவகையில்தான், தலைவர் முதல்வர் அவர்கள் அந்த அறிவுரையோடு என்னையும் இங்கே

அனுப்பியிருக்கின்றார்கள். ஆகவே நான் பேரவையில் கடந்த காலங்களில் இருந்தபோது இங்கே, அவைக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்ட உறுப்பினர்களைத் தண்டித்த நிகழ்வுகளையெல்லாம் கண்டிருக்கின்றேன். எனக்கு ஓர் ஆசை. இந்த அதிகாரத்தால், நான் வருகின்ற ஐந்து ஆண்டுக் காலமும் யாரையும் தண்டிக்கக் கூடாது என்ற ஒரு வாய்ப்பை நீங்கள் அனைவரும் எனக்குத் தர வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை; வேறு எந்த ஆசையும் அல்ல.

அதேபோன்று, நம் அனைவருக்கும் வள்ளுவர் ஒரு கருத்தை, ஒரு குறளிலே சொல்லியிருக்கின்றார்.

'யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு'

என்பது குறள். 'நா' எவ்வளவு வலிமையானது என்று உங்களுக்குத் தெரியும். ஆகவேதான் அதற்கு 32 பற்களையும் வைத்து, அதற்கு உள்ளுக்குள் அதைப் பாதுகாப்பாக வைத்திருப்பது, வெளியே டக்கென்று வந்துவிடக் கூடாது என்பதற்காக. ஆகவே, அதை எல்லோரும் மனதிலே வைத்து, அந்தளவில் நடந்துகொள்ள வேண்டும்.

முற்பகல் 11–50

அதேபோன்றுதான், செம்மொழி மாநாடு—அதற்கான ஒரு பாடல் உங்களுக்குத் தெரியும் 'செம்மொழி பாடல்'. கணியன் பூங்குன்றனார் அருமையான ஒரு பாடலில் சொல்லியிருக்கின்றார், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று. இது எல்லோருக்கும் தெரியும். அடுத்த வரியை பலரும் நினைப்பதில்லை. அடுத்த வரி கணியன் பூங்குன்றனார் சொல்லியது, 'தீதும் நன்றும் பிறர்தர வாரா'. நமக்கு ஒரு தீமையோ, நன்மையோ வருகிறதென்றால் பிறரால் நமக்கு வராது, நம்மால்தான் வரும். அதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். எவ்வாறு, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்றோமோ, அதேபோல, தீதும், நன்றும் பிறர்தர வாரா. ஆகவே, ஒரு கருத்தை சொல்வதற்குமுன் இது தேவையா என்பதை இந்த அவையிலே அறிந்து, புரிந்து, நான் உட்பட, என் வாயிலிருந்துகூட தவறான வார்த்தை வரக் கூடாது என்று நான் இப்போதே என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு வந்திருக்கின்றேன். எல்லோரையும் சமமாகப் பார்க்க வேண்டுமென்றுதான் நான் நிச்சயமாக எண்ணுகின்றேன். அதற்காகத்தான் நான்

சொன்னேன், நடந்தது நடந்தவையாகவே இருக்கட்டும்; நடப்பது நல்லவையாகவே நடக்கும் என்று நான் சொன்னேன். ஆகவே, அந்த அளவில் இந்த அவையைக் கொண்டு செல்ல வேண்டும். உங்களுடைய துணை இல்லாமல் என்னால் நிச்சயமாக முடியாது. ஆகவே, உங்களுடைய துணை எனக்குத் தேவை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். தமிழ்நாடு என்றென்றைக்கும் சிறந்ததோர் அமைதியான மாநிலமாகும். அதைத்தான் மக்கள் விரும்புகின்றார்கள். ஆகவே, தமிழ் மக்கள்மீது, உலகத்தில் உள்ளோர் கொண்டுள்ள நம்பிக்கையைப் பலமாக்கிடும் பாலமாக செயல்பட வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. நம்மைத் தேர்ந்தெடுத்த மக்களின் பார்வையை மட்டுமல்ல, அனைவரும் விழி மலர்ந்திடச் செய்ய வேண்டிய கடப்பாடு நமக்கு உள்ளது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

கட்சி மாச்சர்யங்களை மறந்து, 234 சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து செயல்பட்டு, நாட்டின் உயர்வுக்கு உழைத்திட வேண்டும் என்பதே நம்முடைய தலைவர் அவர்களின் அறிவுரையாக நான் எண்ணுகின்றேன். அதுவும், 'கொரோனா என்னும் பெருந்தொற்று வேகமாகப் பரவி மக்களை வாட்டி வதைத்திடும் இந்த நேரத்தில் நம்முடைய தலைவர் அவர்கள் பதவியேற்றவுடன் முதல் நாளே அவர் சொன்ன வார்த்தை, தமிழக மக்கள் உங்கள் எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். 'கொரோனா தொற்று நோய், உயிர்க்கொல்லி நோய் அல்ல. இந்த நோயிலிருந்து உங்களைப் பாதுகாக்க, காத்திட நான் இருக்கிறேன். ஒரு சிறு அறிகுறி தெரிந்தாலும் நீங்கள் உடனடியாக மருத்துவமனைக்குச் சென்று உங்களைப் பரிசோதித்துக்கொள்ளுங்கள். வேண்டிய நடவடிக்கைகளை எடுங்கள்' என்று சொன்னதோடு மட்டுமல்ல, மிக அதிகமாக இந்த நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட 10 மாவட்டங்களுக்கு அமைச்சர் பெருமக்களை அனுப்பி, உடனடியாக அந்த தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுங்கள் என்று சொல்லியிருக்கின்றார். இன்றுகூட, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் தொகுதிக்குச் செல்லுங்கள் என்று சொல்லியிருக்கின்றார். உடனடியாக அந்த நோயை தமிழ்நாட்டிலிருந்து விரட்டி அடிக்க வேண்டுமென்பதற்காக முழு மூச்சுடன் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என்ற முறையில், நீங்களும் அந்த வகையில் அவர்களோடு இணைந்து இந்த நோய்த் தொற்றை விரட்ட வேண்டும்.

தமிழ்நாடு முழுவதும் மிக அதிகமாகப் பரவிவிட்டது. இறப்பு என்று வரும்போது ஒரு கருத்தை நான் சொல்கின்றேன். நான் அனுபவபூர்வமாகப் பார்த்தேன். ஐந்து நாட்கள், ஆறு நாட்கள், பத்து நாட்கள் காய்ச்சலை வைத்துக்கொண்டு, எனக்கு ஒன்றும் செய்யாது என்று சொல்கின்றவர்களுக்குத்தான் ஆக்சிஜன் தேவைப்படுகிறது. அவர்களுக்குத்தான் அந்த பாதிப்பு ஏற்படுகிறது. எனவே, இவற்றையெல்லாம் வைத்து, யாருக்காவது சிறு அறிகுறி தெரிந்தாலும், மருத்துவமனைக்குச் செல்லுங்கள். அதைத்தான் தலைவர் சொன்னார். சிறு அறிகுறி தெரிந்தால்கூட உடனடியாக மருத்துவமனைக்குச் சென்று பரிசோதித்துக்கொண்டால் வீட்டிலேயே இருந்துகொள்ளலாம். இப்போதுகூட பல மாவட்டங்களிலே சிறு பாதிப்புள்ளவர்கள்கூட, அங்குள்ள மருத்துவமனைகளிலுள்ள நிறைய bed–களை ஆக்கிரமித்திருக்கின்றார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்கள், எல்லோரும் இருக்கின்ற அவையிலே நான் சொல்கின்றேன். தனியார் மருத்துவமனையாக இருக்கட்டும், அரசு மருத்துவமனையாக இருக்கட்டும், சிறு பாதிப்புள்ளவர்கள் அவர்களுடைய வீடுகளிலேயே இருந்துகொள்ளலாம். அந்த bed–கள் நமக்கு மிச்சமாகும். ஓரளவுக்கு அதிகமாக பாதிக்கப்பட்டவர்களை அங்கே தங்க வைக்கலாம் என்பதை நான் என்னுடைய கருத்தாக மட்டுமல்ல, இதுதான் இப்போது எல்லோருடைய எதிர்பார்ப்பாகவும் இருக்கிறது. ஆட்சிக்கு வந்தவுடனேயே முன்களப் பணியாளர்களான செவிலியர்கள் அனைவரையும் பணி நிரந்தரமாக்கினீர்கள். அவர்களுக்கு என்ன தேவையோ அதைச் செய்தீர்கள். நேற்றோ, இன்றோகூட, இறந்த முன்களப் பணியாளர்களுடைய குடும்பத்திற்கு உடனடியாக 25 இலட்சம் ரூபாய் கொடுத்து உதவியதை இந்த மக்கள் மறக்க மாட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முன்களப் பணியாளர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் உட்பட அனைவரும் நாங்கள் தைரியமாக வேலை செய்வோம்; எங்களுக்குப் பாதுகாப்பு கிடைத்துவிட்டது; தலைவர் எங்களோடு இருக்கின்றார் என்று சொல்கின்றார்கள். அந்த அளவில் நான் ஒன்றை மட்டும் சொல்கின்றேன். இந்த கொரோனா நோயை நம்முடைய தமிழ்நாட்டை விட்டு விரட்ட வேண்டும். ஒரு கை அடித்து ஓசை வராது. நாம் எல்லோரும் இணைந்து எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி என்றில்லை, நம்முடைய தமிழக

மக்களைப் பாதுகாப்பதற்கு நாம் அனைவரும் முனைப்போடு செயல்பட வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11–55*

அதேபோன்று,

> “சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்துஒருபால்
> கோடாமை சான்றோர்க்கு அணி”

என்று எல்லோரும் சொன்னீர்கள். அந்தத் திருக்குறளுக்கு ஏற்ப நான் நடந்துகொள்வேன் என்பதையும் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த அவை இயற்றி, எனக்கு அளித்துள்ள சட்டமன்ற விதிகளைப் பின்பற்றி, மரபுகளிலிருந்து விலகாமல், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு உள்ள சிறப்பை நிச்சயம் காப்பேன் என்ற உறுதியை மீண்டும் நான் அளிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இப்பேரவையின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாண்புமிகு அன்பிற்குரிய அண்ணன் திரு. கு. பிச்சாண்டி அவர்களுக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*1996* ஆம் ஆண்டு முதல் நானும் அவரும் சட்டமன்ற உறுப்பினர்களாக இணைந்து பணியாற்றியிருக்கின்றோம். அவர் அமைச்சராக இருந்தாலும், எங்கள் தலைவர் சொன்னதுபோல், அவர் அமைதியானவர், பண்பானவர். அப்படிப்பட்டவர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவராகக் கிடைத்திருப்பது எனக்கு உண்மையிலே மிக்க மகிழ்ச்சியாக இருக்கின்றது. ஆகவே, அவர் எனக்குத் துணையாக இருக்கின்றார். அதேபோன்று, மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா தம்பி அவர்களும், எனக்குத் துணையாக இருக்கின்றார்கள். அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் தாரக மந்திரமான கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றைக் காத்திட முழுமூச்சுடன் பாடுபடுவேன் என்றும், என்னுடைய இந்தப் பணிக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது முழு ஒத்துழைப்பை வழங்கிட வேண்டுமென மனமாரக் கேட்டுக்கொள்கிறேன். தாங்கள்

அனைவரும் எடுத்துச் சொன்னதற்கிணங்க இந்த அவையின் மரபுகளையும், மாண்பையும், கண்ணியத்தையும் நிச்சயமாகக் காப்பாற்றும் வகையிலே என்னுடைய பணிகள் இருக்கும் என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

இங்கே என்னைப் பாராட்டிப் பேசிய அனைவருக்கும், ஒவ்வொருவருடைய பெயரையும் குறிப்பிட்டுச் சொல்வதற்கு நேரமில்லை என்ற காரணத்தினால் எல்லோருடைய பெயர்களையும் நான் சொன்னதாக நினைத்துக்கொள்ளுங்கள். தலைவர், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உட்பட இந்த அவையில் என்னைப் பாராட்டியவர்கள் மட்டுமல்ல; மனதார, மனதளவிலே பாராட்ட வாய்ப்பில்லை என்றாலும், அந்த வாய்ப்பை இனிவருங்காலங்களில் பெற்றுக்கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் என்னைப் பாராட்டியதற்கு இந்த நேரத்திலே எல்லோருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதற்கு முன்னால் ஒரேயொரு கருத்தை மட்டும் நிறைவாகச் சொல்ல விழைகிறேன். இந்த நாட்டிலே, பண பலம், ஆள் பலம், அதிகார பலம் கொண்ட மக்களோடு வாழ்கின்ற கடைநிலையில் உள்ள ஏழையெளிய மக்கள் ஆண்டவரைத்தான் நம்பியிருப்பார்கள். அந்த ஆண்டவரே, இங்கு ஆள்கின்றவராக இருக்கின்றார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களை நம்பித்தான் அந்த சாமானிய மக்கள் இருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சாமானிய மக்களுக்காகத்தான் அல்லும், பகலும் அயராது உழைத்து இந்தியாவிலேயே தமிழகத்தை தலைசிறந்த மாநிலமாகவும், சுகாதாரத் துறையை இன்னும் சிறப்பாக்கி தமிழகத்தை முதல் மாநிலமாக உருவாக்குவதற்கு தலைவர் அவர்கள் பாடுபட்டு வருகிறார்கள். இங்கு பட்டதாரி இல்லாத வீடே இல்லை என்ற ஒரு நிலையை உருவாக்கியவர் தலைவர் கலைஞர். அந்த வழியில்தான் சாமானிய மக்களெல்லாம் நம்முடைய தலைவர், மாண்புமிகு முதல்வர் அவர்களை நம்பியிருக்கின்றார்கள்; நம்பிக்கையோடு இருக்கின்றார்கள். இந்த ஏழையெளிய மக்கள் மட்டுமல்ல, தொழில் துறையில் எப்படிப்பட்ட வீழ்ச்சி, எத்தனை ஆயிரம் பேர் வேலையிழந்திருக்கின்றார்கள்; அனைத்துத் தரப்பு மக்களும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களை நம்பியிருக்கின்றார்கள். எல்லா தரப்பு மக்களுக்குமான

*ஓர் ஆட்சி, நல்லாட்சி நடக்கும்; நடக்கவேண்டும். அதற்காகத்தான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தப் பொறுப்பை ஏற்றிருக்கின்றார்கள். ஆகவே, இந்தளவில்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய எண்ணம், சிந்தனை ஆகியவை இருக்கின்றன. அவர்கள் என்னிடம் எதிர்பார்ப்பதும் இதுவாகத்தான் இருக்கும். இவற்றை நாம் அனைவரும் இணைந்து சிறப்பாகச் செயல்படுவோம். தமிழக மக்களை எல்லா வகையிலும் காப்பாற்றுகின்ற ஒரு நல்ல முதல்வர் கிடைத்திருக்கின்றார். அவருக்கு மீண்டும் ஒரு முறை நன்றி. இந்த அவை உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி எனக்கூறி அமர்கிறேன். நன்றி வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

*எனது உரையின் தொடக்கத்தில் ** என்றேன். அல்ல, நேற்றிரவு நான்* dictate *செய்து, அவர் தயாரித்துக் கொடுத்த உரையென அதனை மாற்றிக்கொள்ளலாம். ஊடகங்கள் அவ்வாறே அதனை மாற்றிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். நேற்றிரவு 9–00 முதல் 9–30 மணி வரையில் நாங்கள் இருவரும்* discuss *செய்துதான் அந்த உரையைத் தயாரித்தோம்.*

## 5. அரசினர் தீர்மானம்

## பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** *அதுதான், தீர்மானத்தை நீங்களே சொல்லிவிட்டீர்களே! மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"பேரவை விதி 25 (1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்"*

*என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.*

---

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[*2021 மே 12*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க.* *(ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க.*

*மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.*

*மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.*

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. நன்றி, வணக்கம்.

*பின்னர், பேரவை நண்பகல் 12–00 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.*

– – – – –

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**110, Anna Salai, Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the**
**Commissioner of Stationery and Printing,**
**Chennai-600 002.**